[illegible]

V 4 N 16 23 [illegible] 1931

ப

[illegible]211, N28 KN
N31. 4. 16.
188914

642

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

3 0 JUN 193

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ ஏப்ரல் மீ 23உ [No. 16.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 301
2. அப்பர் (64-கலை-யோகம்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 303
3. அண்டபுராணம்— தமிழ் வளர்ப்போர் திறமுரைத்தபடலம் T. T. கிருஷ்ணகாந்த முதலியார், M. A. 304
4. பிஸாரோ நாடகம் - (அங்கம்-4, களம்-1.) R. B. Sheridan 306
5. சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம் - 22—31) K. இராமாத்நம் ஐயர் B.A. 308
6. யாப்பிலக்கணம் (தொடை - மோனை) 310
7. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 312
8. மதிப்புரை—ஸ்ரீராமநாதமான்மியம், நவரசகீதமஞ்சரி 314
9. வர்த்தமானம் 319

கலாநிலயம்

உண்மையில் உழல்வார் திறம்.

188914

4.

அறிவினை, கலையறிவென்றும் சாஸ்திர அறிவென்றும் இருவகைப்படுத்துவார் மேனாட்டார். கலை என்பது ஆர்ட் (art) என்னும் ஆங்கிலமொழியில் அடங்கும். சாஸ்திரம் என்பதை ஆங்கிலத்தில் குறிக்க வல்லது ஸையன்ஸ் (science) என்னுஞ் சொல். கர்வியம் நாடகம் சிற்பம் சங்கீதம் சித்திரம் ஆகியவை கலைகளாம். வானசாஸ்திரம், பூதசாஸ்திரம், இரசாயனசாஸ்திரம், உயிர்ச்சாஸ்திரம், மானதசாஸ்திரம், மொழிச்சாஸ்திரம் முதலிய பல சாஸ்திரங்களை யாவரும் அறிவார். மெய்ம்மை ஒன்றண்டென்றுணர்த்துவது கலை; அம்மெய்ம்மையை நாடியடைந்து அறிவதற்கு முயல்வது சாஸ்திரம். சாஸ்திரம் எடுத்துப்பார்க்கும்; கலை கருத்துட் கொள்ளும். சாஸ்திர அறிவிற்கு ஆதாரமாயிருப்பவை சில உண்மைகள்; கலையுணர்விற்கு இலக்காயவை சில குறிகள். உண்மைகளை எடுத்துப்பார்த்து "இவ்விடயம் இவ்வண்ணம் இருக்கின்றது". என்று சாஸ்திரம் வகுத்துரைக்கும். இவ்வண்ணம் இருத்தலால், இது கொண்டு என்னவென்ன இயற்றஇயலும் என்பதையும் கற்பிக்கலாம்.

இவ்வுலகமானது ஓர் உண்மைக்கடல் (ocean of facts) அக்கடலினின்று மெய்ம்மை என்னும் அமுதம் திரண்டெழ உதவுமோர் ஓடதிபோன்றதுகலை. மெய்ம்மையின் சின்னத்தை ஒவ்வோரிடத்திலும் ஒவ்வோர் காலத்திலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலுங் காட்டி இறுதியில் மாயாத வாழ்க்கையை மனிதருக்குப் பயக்கும். எனினும், தற்காலம் கலைகளைக் காட்டிலும் சாஸ்திரங்களே மிகவும் அதிகமாகக் கொண்டாடப்படுகின்றன. 'சாஸ்திரப் பயிற்சி சாஸ்திரப் பயிற்சி' என்ற முறையீடு இந்நாள் எத்திசை திரும்பினும் நம் காதுகளைக் கதுவிக்கொள்ளக் கேட்கின்றோம். "சுறு சுறுப்பு" இக்காலம் மிகுந்திருப்பது சாஸ்திரக் கல்வியே. சாஸ்திரங்கள் ஒன்றன்பின் ஒன்றாய்க் கண்டுபிடித்துக் குவிக்கின்ற உண்மைகளைக்கொண்டு மாறுடநிலை மாறிக்கொண்டே வருகின்றது. புதுப்புது அறிவுகளைச் சாஸ்திரம் புகுத்துகின்றதென்பதை எல்லாரும் ஒவ்வுகின்றனர்; மற்று, நல்லொழுக்கத்திற்கும் நற்குணத்திற்கும், சாஸ்திர அறிவு சாதனமாயிருக்க இயலும் என்னும் எண்ணமோ பெரும்பாலும் எழுவதில்லை. விடயங்களின் உண்மை இன்னதென்று தேர்வதே சாஸ்திரத்தின் தொழில் எனப் பலர் எண்ணியிருக்கின்றனர். சாஸ்திர அறிவின் நுண்ணிய நிலையை அடைந்தவர் சிலர், அவ்வுண்மைகளின் மூலமாய் மெய்ம்மையை விளக்கிவைத்தலும் சாஸ்திரக் கலவியின் முயற்சி எனக் கூறலாம். எனினும், அம்மெய்ம்மையைக் கொண்டு வாழ்க்கையை ஒழுங்கு செய்துகொள்ளவேண்டும் என்பது சாஸ்திரத்தின் காரியமன்றென்றே சாஸ்திரம் வல்லவர்களிற் பலர் கருதியிருக்கின்றனர். எனவே, சாஸ்திர

சு
ரா॥ NDEN
1931-4-16

அறிவின் வளர்ச்சிக்கும் மனிதவாழ்க்கை ஒழுங்கிற்கும் எவ்விதச் சம்பந்தமும் இல்லையென்று பொது ஜனங்கள் மதித்திருப்பது யாதும் வியப்பன்று. நம்முடைய ஒழுக்கமனைத்தும் அறிவினால் உய்க்கப்படுகின்றதென்பதை மறத்தலால் விளையும் பொல்லாங்கு இது. ஒழுக்கத்தை உய்த்திட வல்லதல்லாத தொன்றைச் சாஸ்திரம்எனக்கருதுவதும் இயலாது. மேனாட்டுச் சாஸ்திரிகளுக்கு இவ்வெளிய விடயம் இன்னும் தெளிவாகவில்லை. இந்தியரை வளர்த்தெடுத்த கல்சரோ (Culture) அறிவிற்கும் ஒழுக்கத்திற்கும் உள்ள நெருங்கிய உறவினை ஒருநாளும் அயிர்த்ததில்லை. இந்துக்கள், அறிஞர்களையே அதிகமும் மதித்துப் பாராட்டினர் புத்த மதத்திற்கு ஆதியாய 'புத்தர்' என்னும் பெயரே 'அறிஞன்' என்னும் பொருளுடையதாயிருக்கின்றது. 'சீனதேயம் சென்றேனும் அறிவினை அடைந்துகொள்'' என மகம்மதிய மதத்திலும் வழங்கிவருகின்ற பழமொழி மறக்கற்பாலதன்று. எனினும், இக்காலக் கல்விச்சாலைகளி லெல்லாம், ஒழுக்க நலங்களினின்று சாஸ்திர அறிவை வேறுபடுத்தியே விவகரிக்கின்றனர். இதற்குக் காரணம் அவரவர் மதங்களின்பால் ஊன்றிய பற்று இல்லாமையே. மதப்பற்றில்லாமைக்குக் காரணம், கலையுணர்வு கெட்டழிந்த ஓர் கதியேயாகும். கலையினால் மாண்படைந்த மனந்தான் சாஸ்திரங்களின் செம்பொருளை உணரவல்லதாகும்.

நாமொவ்வொருவரும் இருவேறு உலகங்களில் வாழ்கின்றோ மென்னுமிது அவரவர் அநுபவத்திற்கு இலக்காகியவோர் இரகசியமாம். இவ்விரண் டுலகங்களில், நமது ஐம்பொறிகளால் தீண்டப்படும் உலகம் முதலாவது. இதனைப் 'புறவுலகம்' எனப் புகல்வர். ஐம்பொறிகளால் தீண்டப்பெற்று நடமாடி வருகின்ற இப்புறவுலகத்தினின்று முற்றிலும் வேறுபவோர் உலகம் உளது. அதுதான் நமது எண்ணமும் உணர்வும் இணைந்தியங்கும் உலகம். இதனை ''உள்ளுலகம்'' என இயம்புவார். நாம் வசிக்கின்ற இவ்விரண்டு உலகங்களில், எண்ணமு முணர்வுமாய உள்ளுலகமே எக்காலமும் உயிர்மிக உடையதா யிருக்கின்றது. எண்ணியவாறு ஆகின்றான் மனிதன். மற்று, அவனது எண்ணங்களோ, தன் ஐம்பொறிகளை நேர்மையுறப் பயில்வதைப் பொருந்தியதாயிருக்கின்றது. ஆதலின் புறஉலகத்திற்கும் உள்ளுலகத்திற்கும் இடையறாத் தொடர்பொன்று எப்பொழுதும் இருந்து வருகின்ற தென்பது வெளிப்படை. புற உலகத்தை நம் ஐம்பொறிகளால் அறிய அறிய, உள்ளுலகம் அவ்வறிவிற் கேற்றபடி உருப்பெற்றுத் திரள்வதாகின்றது. நாம் நடமாடித் திரிவது புறவுலகிலேயேயாயினும், அமர்ந்து வைகுவது உள்ளுலகத்திலேயேயாதலால், நம்முடைய வாழ்க்கை நிலைத்திருக்கும் உலகம் உள்ளுலகமே என்னல் வேண்டும். நமது ஒழுக்கமும் உள்ளுலகைச் சார்ந்ததே. ஆதலின், ஐம்பொறிகள் எவ்வாறு புற உலகத்தைத் தீண்டுகின்றன என்பதைத் தழுவியே நம் ஒழுக்கம் அமைகின்ற தன்மையைத் தெரிந்துகொள்ளல் அருமையன்று.

விடயங்களின் தாரதாரங்களை நாம் மனத்தினால் மதிக்கின்றோம் — (இதனால் விடயங்களை மதிக்கும் கருவி மனமென்ப தொன்றே என எண்ணவேண் [illegible] மனத்தினோடு எவ்விதத் தொடர்புமற்ற உள்ளுணர்வினாலும் (Intution) ஒவ்வொருபோது ஒவ்வொரு விடயத்தை மதித்துக்கொள்கின்றோ மன்றோ)—ஆதலின், வாழ்க்கைக்குரிய பற்பல காரியங்களில் நாம் எவ்விதம் ஒழுகுகின்றோமென்பது, நம் மனமானது விடயங்களை மதித்துச் செய்கின்ற தீர்மானங்களைப் பொருந்தியதாக இருக்கின்றது. நம்முடைய அநுபவங்கள் என்னும் பொருள்களைக்கொண்டு நாம் வாழ்வதற்கென மாளிகையொன்று அமைத்துத்தரும் ஒரு கருவி போலாம் நம் மனம். இம்மனம் இதற்கு இயைந்த கருவியாய் உதவினும் உதவலாம், அல்லது ஒன்றிற்கு முதவாது போகினும் போகலாம். உதவாததுடன், கெடுத்தழித்து நம்மைத் தீமைக்குக் கைகாட்டித் தருவதாய் இம்மனம் முடியினும் முடியலாம். ஆகையால், புறஉலகத்தைப் பிழைபற மதிக்கவல்லதொரு கருவியாய் மனத்தைச் செம்மைசெய்துகொள்ள வேண்டுவது எத்துணை அவசியமென்று இயம்புவதும் மிகை.

மனமோ, உண்மைகளைப் (facts) பற்றித்தான் விவகரிக்கக் கூடுமாகையால், எப்பொழுதும் புதிபபுதிய உண்மைகள் நம்மனதை எட்டிக்கொண்டே இருக்க வேண்டும். உண்மைகளைக் கண்டுபிடித்துத் தருவது சாஸ்திரங்களின் காரியமாகும் என்று முன்னரே கூறினோம். மனத்தின்முன் உண்மைகளைக் கொண்டுவந்து நிறுத்தும் உதவியைப் புரிகின்றவளவில் சாஸ்திரங்கள் மிகவும் போற்றற்குரியன. எனினும், உண்மைகளைக் கண்டுபிடித்துத் தருவதோடு, சாஸ்திரங்கள் செய்யவல்ல உதவி முடிந்துவிடவில்லை. இவ்வுண்மையை உட்கொண்டு நடுநிலை பிறழாமல் அவைகளை மதிப்பதற்கியன்ற முறையையும் சாஸ்திரங்கள் பயிற்றுவிக்கின்றன. இதனைத்தான் சாஸ்திரமுறை (Scientific method) என்பர். இச் சாஸ்திரமுறையின் இரகசியம் யாதென வினவின், தூய்மை என்னுமொரு சொல்லால் பதிலுரைக்கலாம். எனினும், சாஸ்திரங்களுக்கும் (Sciences) தூய்மைக்கும் ஒரு தொடர்பு இருப்பதாகப் பலர் எண்ணுவதில்லை. நம்முடைய விருப்புவெறுப்புக்களைக் கொண்டு போய்ச் சேர்க்காமல் உண்மைகளை நடுநிலை நின்று மதித்துத் தீர்மானம்செய்கின்ற பயிற்சிதான் சாஸ்திரமுறையின் தூய்மையெனத் தகுந்ததாகின்றது.

சாஸ்திரக் கல்வியானது ஐம்பொறிகளை நேர்மையுறப் புறஉலகத்தில் செலுத்திச் சில உண்மைகளைக் கண்டுபிடித்து மனத்திற்களித்து, அம்மனம் தூய்மையாய முறையில் அவ்வுண்மைகளை மதிக்கும்படி செய்கின்றது. இவ்வுண்மைகளை முதலில், விருப்பினோடு தழுவலாகாது, வெறுப்பினால் விலக்கலாகாது. பின் அவ்வுண்மைகளை ஒவ்வொன்றாய் நோக்கல் வேண்டும்; பிறகு ஒருங்கே தொகுத்து நோக்குதல் வேண்டும். முன் கண்ட உண்மைகளோடு ஒப்பிட்டு நோக்கல் வேண்டும். இவ்வுண்மையைக்கொண்டு இனி எவ்வுண்மையை எய்தலாம் என ஊகித்தல் வேண்டும். [illegible]க்கும் சாஸ்திர முறையின் செய்திகள்.

அப்பர்

அப்பரும் அறுபத்தினன்கு கலைகளும்.

24. யோகம்

[284-வது பக்கத் தொடர்ச்சி]

8. இராஜ யோகத்தின் சிறப்பு அங்கங்கள்.

(i) ஆசனம்:—ஆசனமாவது இருப்பதின் நிலை. யோகாப்பியாசிகள் பலகாலம் சலனமில்லாமல் ஒரேஇடத்திலிருந்து மனதைஒடுக்கித் தியானத்திலமுத்திப் பரம்பொருளுடன் கலந்து இன்பம் நுகரப் பிரயத்தனம் செய்வாராதலால் ஓரிடத்திலேயே தேகமானது பூட்டியவோர் வில்லைப்போலத் தளராமல் நிற்கவும், வேண்டாதகாலத்தில் உலக வியற்கையில் இயங்கும் தன்மையோடு சாதாரணமாய்த் தேகத்தின் கட்டுகள் ஊனமின்றி நிற்கவும், சிலமுறைகளை நமது முன்னோர்களான சித்தர்கள் கண்டு, அவற்றை மனிதனுக்குத் தக்கவாறு அமைத்திருக்கின்றனர். இத்தகைய ஆசனங்களில் எது எவனுக்கு அநுகூலமாயிருக்குமோ அதை யவன் பழக்கிக்கொள்வான். அடியில் விவரிக்கும் ஆசனவகைகள் நமது எலும்புகளின் பூட்டுக்களிலுள்ள தைலம் கெடாமலும் இரத்தம் அசுத்தமாகாமலும் ஒரேயிடத்தில் தேகத்தைப் பலகாலம் இருத்தும் உபாயங்களாம். அவை வருமாறு:—

சுவத்திகம்:—தொடையினுக்கும் முழங்காலுக்கும் நடுவே இரண்டு உள்ளங்கால்களைச் செலுத்தி இறுமாந்து உட்காருதலாம். இந்த நிலைமையையும் குறிப்பதுபோல் திருநாவுக்கரசர் திருவங்கமாலையில் உள்ளதோர் பாசுரத்தைக் காண்க.

இறுமாந் திருப்பன் கொலோ—வீசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச் சென்றங்
கிறுமாந்திருப்பன் கோலோ

திருவங்கமாலை 11

இறுமாப்பென்பது உலகவழக்கில் காணப்படும் கர்வம் அன்று. ஏனெனில் அப்பர் சொல்லும் அந்நிலைக்கு அப்பொருள்பொருத்தமாகாது. ஈசன் பல்கணத்தில் எண்ணப்பட்டவர்களுக்கு இறுமாப்பு(Vanity) சற்றும் கிடையாதாதலாலும், ''இறுமாந்து கிடப்பன், ''இறுமாந்து நிற்பன்'' என்று பகராமல் ''இறுமாந்து இருப்பன்'' என்றதனால், சுவத்திக ஆசனத்தில் நிர்விகற்பசமாதியில் ஆநந்தபரவசனா யிருப்பேன் என்றதுபோல் இத்தொடர்நிலை காணப்படுகின்றது. ஆயினும் அப்பர் திருவுள்ளம் இதுதான் என மொழியயான் பாத்திரனல்லேன். அறிஞர். இதன் பொருளை ஆராய்க.

பதுமம்-இதைப் பதுமாசனமென்பர். இது பெரும்பாலும் எல்லாயோகிகளும் பழகுமொரு ஆசனமாம். இருதொடைமேலும் இரண்டு உள்ளங்காலை மாற ஊன்றி வைக்கவேண்டும். இது முழங்கால்நோய், தொடையெலும்புகளிலுள்ள நோய் வாராது தடுக்கும் உபாயமாகும். கடவுளின் தன்மையை விளக்க எல்லா வடிவங்களைக் காட்டிலும் தாமரையே சிறந்ததென ஆன்றோர் கூறுவார். எல்லா ஆசனங்களிலும் பதுமாசனமே சிறந்ததென்றும் பல யோகிகள் கூறுவர். சிவபெருமான் திகழும் எரிவடிவமும் தாமரைவடிவமுமென்று அப்பர் கூறுவது காண்க:—

பிரியாத குணமுயிர்கட் கைந்தோ டைந்தாய்ப்
பிரிவுடை குணம்பேசிற் பத்தோ டொன்றாய்
விரியாத குணமொரு நான்கே யென்பார்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பார்
தெரிவாய குணமஞ்சும் சமிதை யஞ்சும்
பதமஞ்சுங் கதியஞ்சும் செப்பி னாரு
மெரியாய தாமரைமே லியங்கி னாரு
மிடைமருது மேவிய வீசனாரே.

திருவிடைமருது - திருத்தாண்டகம் 7.

கோமுகம்:—இந்த ஆசனத்தில், யோகி சகனப்பக்கத்தி லிருகாற் பரட்டையும், மாறவைத்து இருகாற் பெருவிரலைக் கையிற் பிடித்திருப்பான். சிறுவயதில் சிற்சில குழந்தைகள் காற் பெருவிரலை வாயில் வைத்துச் சுவைப்பது உண்டு. இதுஉத்தமமான குழந்தைகளுக்கு அறிகுறியாம். பாலகிருஷ்ணனைச் சில படங்களில் இவ்வாறு காட்டியிருப்பதை இன்றுங் காணலாம். தேகத்தில் வலிவு அதிகமாயில்லாமல் பலயீனம் சிறிதுண்டாயின், அதை நீக்குவதற்கும் கால் பெருவிரலைப் பிடித்து இருக்கும் இந்த ஆசனம் யோகியை இளைப்பு வாராது பாதுகாக்கும்.

வீரம்:—இது தேகதிடமுடைய யோகிக்குத் தக்கதாம். ஒருவன் வலதுதொடையி லிடக்காற்பரட்டைச் சேர்த்து இறுமாப்புற்றிருத்தல்.

கேசரி:—இது அடயோகத்தில் ஒருவகை முத்திரையாகக் கொள்ளப்படும். அதன் விவரம் பின்னர் வருவன காண்க. பீசத்தின்கீழ்ச் சீவனியிடத்துப் பாட்டையை வைத்திட முழங்கையை முழந்தாளில் வைத்து அங்குலி விரித்து நாசியைப் பார்த்தல். இதனால் தேகத்தின் யந்திர சூழ்ச்சிகள் ஒரு முனையில் நிலைக்கும். நாசி நுனியில் ஒருவகைச் சுடரொளி இந்நிலையின் பூர்த்தியில் காணப்படும்.

பத்திரம்:—இவ்வாசனமானது தேகம் அழியாமற் காக்கப் பயன்படும். இவ்வாசனத்திலுள்ள யோகி, பீசனத்தின் கீழ்ச் சீவனியிடத் திருகாற் பரட்டையும் வைத்து அவ்விருபதத்தையும் இருகையா லிறுகப்பிடித்து அசையாதிருத்தலாகும்.

முத்தம்:—இவ்வகை யாசனத்தில், யோகி இடக்கால் பரட்டால் சீவனியை யமுத்தி வலக்காற் பரட்டாற் பரட்டின்கீழ் உந்த விருத்தல் செய்வான்.

மயூரம்:—முழங்கை யிரண்டு முந்திப் புறத்திலழுந்தப் புவியிற் கையூன்றிக் காலீட்டித் தலைநிமிர்ந்திருத்தல் இவ்வாசன நிலையாம். இது மயில்போலிருப்பதால் மயூரமெனப் பெயர்பெற்றது.

சுகாசனம்:—இது ஒருவகையன்று. சுகமும் திடமும் எவ்வாறு இருக்கினெய்துமோ அவ்வாறே இருத்தல் ஆகும். அதாவது எந்தநிலை சௌக்கியமோ அந்த நிலையிலிருப்பது சுகாசனம்.

இவ்வாசனங்களும் அவற்றைக்கொண்டு யோகிகள் செய்யும் மேல்நடவடிக்கைகளையும் தாயுமானவர் திருவாக்கால் காண்க:—

நியம லக்ஷணமு மியம லக்ஷணமு
மாச னாதிவித பேதமும்
நெடிது ணர்த்திதய பத்ம பீடமிசை
நின்றிலங்கு மச பாநலத்
தியல நிந்து வளர் மூல குண்டலினை
யினிதி றைஞ்சியவ ளருளினால்
எல்லை யற்றுவளர் சோதி மூலவன
லெங்கள் மோனமனு முறையிலே

வயமி குந்துவரு மமிர்த மண்டல
மதிக்குளே மதியை வைத்துநான்
வாய்மடுத் தமுத வாரியைப் பருகி
மன்னு மாரமிர்த வடிவமாய்ச்
செயமி குந்துவரு சித்த யோகநிலை
பெற்று ஞானநெறி யடைவனோ
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே.

சிற்சுகோதய விலாசம்.

அண்ட புராணம்

தமிழ் வளர்ப்போர் திறமுரைத்த படலம்.

[295-வது பக்கத் தொடர்ச்சி]

அந்த மகாநாட்டில் பேசியவர் பலதிறப்பட்டவர். தமிழ்மொழிப்பயிற்சி நன்கு வாய்ந்தவர் சிலர், பயிற்சியிலதேனும் அதன்பால் பரிவுகொண்டவர்போல் பாவித்தவர் பலர். ஆங்கிலம் வல்லுநர்சிலர், தமிழ்மட்டுமே வல்லுநர் சிலர், ஆங்கிலம் தமிழெனும் இரண்டும் ஒருங்கே வல்லுநர் ஒவ்வொருவர். ஆரியம் வல்லுநர் அங்கொருவரும் சங்கமமர்ந்தாகத் தெரியவில்லை. தமிழ்மாத்திரங் கற்றிருந்தவர் ஒவ்வொருவரும், தமிழ் என்னுஞ் சொல்லிற்கு இனிமை என்னும் பொருள் உளதென்றும், வடவேங்கடம் தென்குமரி முதலிய எல்லைகள் அவ்வினிமைக்கு அமையுமென்றும் சொல்லியபின்னர்த்தான் தம் உரையின் மேற்சென்றனர். தமிழிற்குத் தக்க ஆதரவு தற்காலத்தில் அளிக்கப்படுவதில்லைஎன்பதே அவர்முறையிட்ட பாட்டிற்கெல்லாம் பல்லவியாய் அமைந்திருந்தது. இன்னும் சற்று ஆழ்ந்துபார்த்தால், தமிழிற்கு ஆதரவளிப்பது என்பதன் பொருள், தமிழ்ப்பண்டிதர்களுக்குப் பாடசாலைகளில் சம்பளம் உயர்த்தவேண்டும் என்பதாய் முடியும். தமிழின் பெருமைக்கு ஏற்ற சம்பளம்கிடைக்காதது வெட்கக்கேடென்பர். ஆங்கிலம்மாத்திரம் கற்றவர் பேச்செல்லாம் ஒரு அச்சு. தங்களுக்குச் சரிவரத் தமிழ்மொழியில் பேசமுடியாதிருப்பது வெட்கக்கேடு என்பர். வெள்ளைக்காரர் இரண்டுபேர் இங்கே சந்தித்தால் தமிழில் பேசுவதில்லையே. தம் தாய்ப்பாஷையிற்றானே பேசுகின்றனர். ஆனால் தமிழர்களோ தங்களுக்குள்ளே இங்கிலீஷிலேயே பேசுகின்றனர், கடிதமும் இங்கிலீஷில்தான் எழுதுகின்றனர் என்பதை நினைக்க இவர்களுக்கு மானம் போகின்றதாம். ஆகையால் எல்லாரும் இனிமேல் தமிழிலேயே எழுதவும் பேசவும் சபதம் செய்துகொள்ள வேண்டுமாம். ஸைன்ஸ் ஆல்ஜீப்ரா ஜாமட்ரீ எல்லாம் தமிழிலேயே இனிப் போதிக்கப்படவேண்டுமாம். தமிழ்ப்பண்டிதர் கஷ்டமான நடையில் எழுதுவதினால்தான் பெரும்பாலார் தமிழென்றால் பயப்படுகிறார்களாம். ஆகையால் எது எழுதினாலும் தெருவில்போகிற கட்டைவண்டிக்காரனுக்கும் (தமக்கும்?) புரிகிறபடி இருக்கவேண்டுமாம். அப்பொழுதுதான் நம் இந்தியாவிற்கு நல்லகாலம் பிறக்குமாம். (கரகோஷம்). இந்த ஸ்வரத்தில் இவர்கள் பாடினார்கள். ஆங்கிலப்பயிற்சியோடு தமிழிலும் தேர்ந்தவர், தமிழ் ஆங்கிலம் இரண்டும் அருமையான பாஷைகள் என்று ஓலமிட்டனர். ஆனால் ஆங்கிலம்படித்தவர்களுக்குத்தான் தமிழின் அருமை நன்குவிளங்கும் என்று உரைக்கும்போது தமிழ்ப்பண்டிதர்களில் சிலர் இரண்டொருவராய் எச்சில் விழுங்கினார்கள்.

அவ்வவ்வினத்தைச் சேர்ந்தவர் அனைவரும் ஒன்றையேதான் திருப்பித்திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தனர். ஒருவர் சொன்னதைத்தான் மற்றவர்கள் பின்பாட்டாகப் பாடினார் என்பதற்கில்லை. ஏனெனில் அங்கிருந்தவர் எல்லாரும் பின்பாட்டுக்காரர்களே. ஆகையால் யான் இவைகளைத் தொகுத்துக் கூறினேன். 'குரங்குமூஞ்சியெல்லாம் ஒரே மூஞ்சி' என்று இருக்கின்ற பழமொழி பொய்—பர்மாக் குரங்கு, ஹைதராபாத் குரங்கு, ஆப்ரிகா குரங்கு, கருங்குரங்கு என்ற பலவித குரங்குமூஞ்சிகள் காணலாமே. மற்று, மகாநாட்டு மூச்செல்லாமோ ஒரே மூச்சு—நிற்க,

ஆதித்திராவிடர், பத்திரிகை ஆசிரியர், மாதர்கள் முதலிய தனிவகுப்பினரும் தங்கள்தங்களுக்கு உரிய அபிப்பிராயங்களைத் தெரிவித்துக்கொண்டனர் தமிழ்நாட்டு மாதர்களின்சார்பாகப் பேசிய ஸிஸ்டர். முத்துவல்லிஅம்மாள், ஔவை காரைக்காலம்மையார் போன்ற மாதரசிகள் இருந்த தமிழ்நாட்டில் பெண்கள் அடுப்பூதிக்கொண்டிருக்கும் வரையில் தமிழிற்கும் தமிழ்நாட்டிற்கும் நல்லகாலமென்பது வரவே வராதென்று திட்டமாய்ச் சொல்லிவிட்டார்கள்—(புருஷர்கள் அடுப்பூதினால் வந்துவிடும் என்பது, முப்பத்திரண்டு உத்திகளில் ஒன்று). 'தமிழ் விளக்கு' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் வேடிக்கைவேடிக்கையாகப் பேசியிருக்கவேண்டும்; ஏனெனில் எல்லாரும் இடையிடையே சிரித்தனர். ஆங்கிலம் கற்றவர், தமிழ்ப்பத்திரிகைகளை வெறுத்துவிட்டு ஆங்கிலத்திலேயேவர்த்தமானங்களைப்படித்துக்கொண்டிருக்கின்ற வரையில் நமது தாய்நாடு உருப்படப் போவதில்லை என்பது அவர் துணிவு. தமிழிற்கு எல்லாரும் எப்பொழுதும் தொண்டுகள் ஆற்றிக்கொண்டேயிருக்கவேண்டுமென்று இவர் பற்பலவிதங்களில் வற்புறுத்தியவைகளனைத்தையும் தொகுத்துப் பார்க்குங்கால், அந்தத்தொண்டு முழுவதும் 'தமிழ்விளக்கை' எல்லாரும்வாங்கி வாசிப்பதில் அடங்கிவிட்டதெனத் தெரிகின்றது.

அப்புறம் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தமிழின்பெருமையை நிலைநாட்டி அதன்வளர்ச்சியைக் காத்துவரும்பொருட்டுச் சென்னைச் சட்டசபையில் தமிழ்ப் பண்டிதர் ஒருவரை அங்கத்தினராய்ச் சேர்த்துக்கொள்ள வட்டமேசை மகாநாட்டிற்கு ஓர் விண்ணப்பம் அனுப்பவேண்டுமென்பது முதல் தீர்மானம். சட்டசபையில் மாத்திரமன்றி, செனட்டுகள், ஜில்லா தாலுக்கா போர்டுகள், முனிஸிபாலிடிகள் எல்லாவற்றிலும் தமிழ்ப்பண்டிதர்க்குத் தனியிடம் இருக்கவேண்டுமென்று அந்தத் தீர்மானத்திற்கு ஓர் திருத்தம் கொண்டுவந்தா ரொருவர். தமிழ்ப்பண்டிதர்களோடு தமிழ்ப்பத்திரிகை ஆசிரியர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று அத்திருத்தத்தின்மேல் ஓர் திருத்தம் கொண்டுவந்தார் தமிழ் விளக்கின் ஆசிரியர். எல்லாம் கேட்டால் ஒன்றுமில்லாமற் போய்விடுமோ என அஞ்சிச் சிலர் இத்திருத்தங்களை எதிர்த்தனர். இதன்மேல் திருத்தங்களை விட்டுத் தீர்மானம் மாத்திரம் நிறைவேறியது.

இன்னும் பல தீர்மானங்கள் நிறைவேறிய வெனினும் அவைகளையெல்லாம் இங்குக் கூறிக் காலம் கழிக்க நான் விரும்பவில்லை. சுருங்கச் சொல்லல் என்பது என்னுடைய சிறப்பு இயல்புகளில் ஒன்று. ஆயினும் அகராதியைப்பற்றி அந்தத் தமிழ்த்தொண்டர் மகாநாடு நிறைவேற்றிய ஒரு தீர்மானத்தை உரைக்காமல் அகலவோ யாருக்குத்தான் மனம்வரும்? இந்தப் பிரேரேபணையைக் கொண்டுவந்தவர் 'மதி அழகனார்' என்பர்-(அன்னையார் தொட்டிலில் இட்ட பெயர் 'சோமசுந்தரன்,' என்பது. அது ஆரியப்பெயரென அலமந்து தனக்கு வயதுவந்ததும், 'மதி அழகனார்' என மொழிபெயர்த்துக் கொண்டார். இது சங்ககாலப் புலவர்களின் பெயர்போல் ஒலிப்பதுமன்றி, புத்தியின் அழகினாற் சிறந்தவர் என்றும் பொருள்பட நிற்றலால் இப்பெயர்சூடிப் பெரிது உவந்தார். இது தனித்தமிழ் என்றவோர் எண்ணமும் அவருக்கு இருந்ததாகத் தெரிகின்றது). பாஷையின் வளர்ச்சிக்கு அகராதி மிகவும் முக்கியம் என்றும், அது எல்லார்கையிலும் இருக்கவேண்டு மென்றும், ஆனால் அதிக விலை கொடுக்கவேண்டி யிருத்தலால் ஆயிரத்தில் ஒருவர்கூட அகராதி வாங்குவதில்லையென்றும், ஆகையால், நாலணாவிற்குள் அடங்கக்கூடிய ஒரு அகராதி தயாரித்துப் பதினாயிரக் கணக்காய் அச்சிட்டு விற்றால் நம் தமிழ்மொழி என்றுமில்லாத ஒரு புத்துயிர்பெற்றுவிளங்குமென்றுங்கூறி, கிறிஸ்தவர் தங்கள் பைபிலைக் குறைந்தவிலைக்கு விற்பதாற்றான் அந்த மதம் இப்பொழுது உலகமெல்லாம் பரவிவருகின்றதென்றும், தேவாரம் திருவாசகம்முதலிய நஞ்சமய நூல்களை இப்பொழுது குறைந்தவிலைக்கு விற்கத் தலைப்பட்டிருப்பது போலவே அகராதியை விற்கத் தலைப்படுவதுதான் நம் மதிக்கு அழகென்றும், உருவத்தில் சிறியதாயிருக்குமாகையால் இதற்குக் "குறளகராதி" எனப் பெயர்வைக்க வேண்டுமென்றும், இதனில் ஆரியமொழிகளைச் சேர்க்காமல், எல்லாந் தனித்தமிழ்ச் சொற்களாயிருக்க வேண்டும் என்றும், - (அகராதி என்பதே வடமொழியாயினும், அதனைத் தெரிந்துகொள்ளக்கூடிய நினைவும் பகுத்தறிவும் இருந்தால் இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக்கொண்டுவந்திருப்பாரா,மதியழகனார்? இதனை ஏற்றுக் கொண்ட அம்மகாநாட்டுச் சனங்களும் மதிமிக அழகர்களே)-இந்தக்காரியத்தை முடித்துவைக்கத் தானுள்பட நான்கு பேரை கமிட்டியாய் நியமிக்கவேண்டு மென்றும், செட்டிநாடு முதலிய இடங்களுக்குச் சென்று இதன்பொருட்டு யாசகம்செய்ய இக்கமிட்டியாருக்கு அதிகாரம் தரவேண்டு மென்றும் கேட்டார். இதற்குப் பற்பல திருத்தங்கள் வற்புறுத்தப்பட்டன. கமிட்டியார் நியமனத்தில் கடுகடுத்த முகங்கள் கணக்கில. "தண்டிய பணத்திற்கு வரவு செலவுக் கணக்கு வாரவாரம் பத்திரிகைகள்மூலமாய் வெளியிடவேண்டும்" என்ற ஒரு திருத்தத்தைத் தமிழ் விளக்கின் ஆசிரியர் நிறைவேற்றிவைத்தபோது, கமிட்டியில் நியமனமாகாமல் தோற்றுப்போனவர் தம் பழி ஒருவாறு தீர்ந்ததென்று ஆறினார். அந்தப் பத்திரிகைகளில் தன்னுடைய பத்திரிகையும் ஒன்றாயிருக்குமாகையால் இந்த விளம்பர வருமானத்தை மனதில்வைத்தே இத்திருத்தத்தைக் கொண்டுவந்தாரவர் என, என் பக்கத்திலிருந்த தமிழ்த்தொண்டர்களிற் சிலர் பேசிக்கொண்டனர். எனினும் இதைவிட முக்கியமான திருத்தம் வேறொன்றுளது. இதனைக் கொண்டுவந்தவர், பி.எ. பி எல். பட்டம்பெற்ற ஒரு வக்கீல். நாலணாவிற்குத் தமிழுலகெலாம் நிலவப் போகின்ற இந்த அகராதியில் கடினமான சொற்கள் ஒன்றுகூட இருக்கப்படாதாம். கடினமான சொற்கள் அகராதியில் இருப்பதாற்றான் தமிழ்ப்பண்டிதர்கள் தன்னைப் போன்றவர்களிடத்தில் இரக்கமின்றி, அவைகளை உபயோகப்படுத்தித் தமிழைக்கண்டு பயப்பட வைக்கின்றார்களாம். ஆகையால், ஆடு மாடு கழுதை போன்ற எளிய சொற்கள்தாம் அதில் இருக்கவேண்டுமாம். ஐந்துவயதுப் பையனுக்குந் தெரியாத பதம் ஒன்று அந்த அகராதியில் இருந்துவிட்டால் செய்ததெல்லாம் வீணாய் விடுமாம்(கரகோஷம்). இவருக்குச் சார்பாகப் பேசிய ஓர் உயர்தரப் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் இந்தத்திருத்தம் தக்கதே எனத் தான் மகிழ்கின்றாரென்றும், எளிய வார்த்தைகளையும் சனங்கள் எப்படிப் பேசுகின்றார்களோ அப்படியே அகராதியில் அமைக்கவேண்டுமென்றும், அப்படிக்கின்றி இலக்கணம் தெரியும் என்ற கர்வத்தில் எப்படிஎப்படியோ சிலர் எழுதிவிடுவதால் அர்த்தம் புரியாமல் போய்விடுகின்றதென்றுங் கூறி அவர் காட்டிய சில உதாரணங்கள் அருமையானவை. பந்நி, என்றால் எல்லாருக்கும் தெரியக்கூடியதாயிருக்க அதைப் பந்ரி என்று இலக்கணமாக எழுதி ஒருவருக்கும் தெரியமாட்டாமலடித்துவிடுவதும், பில்லு (Grass) என்பதை, பில் என எழுதிக் கெடுத்துவிடுவதும் வருந்தத்தக்கதாம். இதற்கிடையில், தன் காரியமாக என்னை அம்மகாநாட்டிற்கு அழைத்துச் சென்றிருந்த பல்லிச்சாமி பிள்ளையவர்கள், அடுத்தபடி நானெழுந்திருந்து விளையாவயல் நெல்லூர்ப் புராணத்தைப்பற்றிப் பேசவேண்டுமென்று தூண்டினவராய்த் தானமர்ந்த இடத்திலிருந்து எனக்குக் கட்சாடைகள் போக்கிக்கொண்டிருந்தாராகையால், அப்படியொன்றுஞ் செய்ய எப்பொழுதும் நினைத்திராத நான், அவர் சாடைகளைக் காணாதவாறு, தூங்குகிறவனைப்போல் என் கண்களை மூடிக்கொண்டேன். பொய்யுறக்கம் புக்க யான், கேட்டுக்கேட்டுச் சலித்திருந்த என் செவிகளுக்கு மகாநாட்டுச் சலசலப்பே தாலாட்டாக, மெல்லமெல்ல [illegible]

இறுத்தகாதலின் மெய்யே சிறிது உறங்கிவிட்டேன். அவ் வுறக்கத்தினிடையே காணக்கிடைக்காத காட்சியொன்று கைகூடியது. மெலிந்த யாக்கையர் நீண்ட தாடியர் ஒரு பெரியார் என் கனவின்கண் தோன்றி, "மைந்தா, யானே அண்டபுராணம் ஆக்கிய கற்கி என்பான். இதுவரையில் நீ பட்ட கட்டங்களுக்கெல்லாம் ஈடாக ஓர் படலம் உரைக்கின்றேன் கேள்" என இழுமென் ஒலியொடு விழுமிய பொருள் செறிந்த "தமிழ் வளர்ப்போர் திறமுரைத்த படலத்தைப்" பாடினார். என் கனவுள்ளத்தில் இப்பாடல்கள் கிராமபோன் பிளேட் மாதிரி பதிவாயிற்று. அதுவும் முடிந்தது, கண்ணும் விழித்தேன். வெகு நாட்களாய் விழைந்தது எதிர்பாராவண்ணம் வந்துசேர்ந்த விதமிதனை யுன்ன மனம்பூரித்து, மறக்காமுன் எழுதி வைத்தற்கு அவாவினேன். காகிதம் எழுதுகோல் ஒன்றும் என் கையில் இல்லை. நாற்புறமும் நோக்கினேன். அக்கிராசனாதிபதியும் அவருக்கு அயலில் பத்திரிகை ரிபோர்ட்டர்களும் தூங்கிக்கொண்டிருக்கக் கண்டேன். சட்டென எழுந்து, அக்கிராசனாதிபதியின் கையின்கீழிருந்த காகிதத்தையும், ரிபோர்ட்டர் ஒருவர் சட்டைப்பையிலிருந்த எழுதுகோலையும் அவர் அறியாமலே கவர்ந்துகொண்டு யான் கனவிற் கேட்ட பாடல்களைப் பெயர்த்தெழுதினேன். இப்பொழுது தங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்ற அண்டபுராணப் படலத்தின் வரலாறு இதுவே. தக்கதெனத் தோன்றினால் தயைசெய்து நம் அருமைக் கலாநிலயத்தில் பிரசுரஞ் செய்யவும்.

இப்படிக்குத்
தங்கள் அன்புமறவாக்
'கருட நாதன்'

(தொடரும்)

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[286-வது பக்கத் தொடர்ச்சி]

நான்காம் அங்கம்

முதற் களம்

இடம்:—சிறைக்கூடம்.

[அலான்ஸோ விலங்கு பூண்டிருக்கின்றான். அவனருகில் காவற்காரன் உலவிக்கொண்டிருக்கின்றான்]

அலான்ஸோ:—இருள்சூழ்ந்து கடல் மறைவதைக் கடைசிமுறை கண்டுவிட்டேன். இந்தச் சிறையினது கூரையிலுள்ள பிளப்புவழியாய்த் தாரகைகள் குலுங்கிக்குலுங்கி யொளிரும் காந்தியையும் கடைசியாக நான் பார்த்தாகிவிட்டது. கடைசியாக, ஓ சூரியனே! காலம் குறுகிவிட்டது—அருணோதயத்தையும், இலை மேற்படிந்த பனிநீர்ப் பிரகாசத்தையும் கண்டுவிடுவேன் பிறகு—நமன் வந்து என்வாழ்க்கையினது ஆரம்பத்திலேயே என்னுடைய இன்னுயிரைக்கவர்ந்துசெல்வான் இல்லை—அலான்ஸோ, உன் ஆயுளை வருஷம் மாதந் தேதிகளாகிய அற்ப அளவையாற் கணக்கிட்டுப் பார்க்கலாகாது. தூயவனொருவன்தன் வாழ்நாட்களை அவனது நற்செய்கைகளாலன்றி வருடங்களென்னும் அளவையாலா அளப்பார்! ஆயின், முணுமுணுக்க நியாயமில்லை. உனக்கிருந்த ஒருசாண் ஆயுளில், தீயோரைச் செகுத்து நல்லோரை நிலைநாட்டும் வேலைக்கு உன்னையே கருவியாகக்கொண்டு கதியற்றவரைக் காப்பாற்றிய அக்கடவுளைத் துதித்துச்செல்வாய். ஜனோபகாரமொன்றும் புரியாமற் கழிந்தவொருவன் மூப்பு முதிர்ந் திறந்தாலும், அவனுக்குற்றது அகால மரணமே யாகும். நன்கு வாழ்ந்தவர்களே நீண்டு இருந்தவர்களாவர்.

[போர்ச்சேவகன் ஒருவன் வந்து காவற்காரனுக்கு உத்தரவுச்சீட்டைக்காட்டி, அலான்ஸோவினிடம் வருகின்றான்.]

அலான்ஸோ:- என்ன கொண்டுவருகின்றாயங்கே?

போர்ச்சேவகன்:—இவ் வுணவைத் தங்களிடம் வைத்துவிட்டு வரும்படி உத்தரவு.

அலான்ஸோ:—யாருனக்கு இவ்வுத்தரவளித்தது?

சேவகன்:—எங்கள் தலைவி எல்விரா—பொழுது புலருமுன் அப்பெருமாட்டியே இங்கு வருவார்.

அலான்ஸோ:—எனது தாழ்ந்த வந்தனத்தை அவளிடம் செலுத்திவிட்டு நீயே இவ் வுணவுகளை யுண்டுவிடு—எனக்கிவைகளொன்று மவசியமில்லை.

சேவகன்:—நான் தங்கள்கீழ்ச் சேவகம் செய்துளேன். அலான்ஸோ பிரபூ, மன்னிக்கவேண்டும். தங்களை இந்நிலையிற் காணச் சகிக்கவில்லை. (போகின்றான்)

அலான்ஸோ:—ஆம். பிஸாரோவின் சைனியத்திலிருப்பவன், என்னைப்போன்ற புன்விதியுடையவனொருவனைக் கண்டு மனம்உருக, மன்னிப்புக்கேட்கவேண்டியதுதான். நன்று, நன்று! (வெளியே பார்த்து) சூரியன் தயங்கித்தயங்கி விரித்துவரும் கிரணங்களொன்றிரண்டு வெளிக்கிளம்பிவிட்டன. எனக்கு எஞ்சியிருப்பது இன்னும் ஒருநாழிகை நேரமே. பொழுதுபுலரக்காத்துநானிங்கேநிற்பானேன்; எனது இருட்டுச் சிறையுட்சென்று எல்லாம்வல்ல பெருமானை யான் இறுதிமுறை துதித்துப் பின் எதற்கும் ஆயத்தமா யிருப்பேன். என் மனைவிமகவிற்காக! அவர் பொய்படியா மனவமைதியுடன் மனோவாக்குக் காயங்கள் பரிசுத்தமாய் வாழட்டும். கடவுளே!—மற்றொன்றும் வேண்டியதில்லை. (சிறைக்குட் போகின்றான்)

காவற்காரன்:—யாரது? விரைவிற் சொல்! யாரது?

ரோலா:—(உள்ளிருந்து) சிறையுள் ளிருப்போனைக் காணவந்த சன்னியாசி யொருவன்.

(ரோலா சன்னியாசி வேடம்தரித்து வருகின்றான்)

ரோலா:—என்னப்பா, அலான்ஸோவை-இன்றைய தினமகப்பட்ட ஸ்பானிய வீரனை—இந்தச் சிறையிற்றானே அடைத்து வைத்திருக்கின்றார்?

காவற்காரன்:—இங்கேதான் அடைத்து வைத்திருக்கின்றார்!

ரோலா:—நான் அவனுடன் சில பேசவேண்டும்.

காவற்காரன்:—கூடாது. [ஈட்டியாற் தடுக்கின்றான்]

ரோலா:—அவன் எனது நண்பன்.

காவற்காரன்:—உனது சகோதரனாயித்தானிருக்கட்டுமே.

ரோலா:—அவன் கதி என்னவோ?

காவற்காரன்:—உதயத்தில் சாகின்றான்.

ரோலா:—ஹா, ஆயின் நான் தக்க வேளையில்தான் வந்திருக்கிறேன்.

காவற்காரன்:-ஆம், அவன் கொலையுண்பதைக் காண

ரோலா:—போர்ச்சேவகா! நானவனுடன் ஒரு வார்த்தை பேசவேண்டும்.

காவற்காரன்:—போ! போ! அது இயலாது.

ரோலா:-வேண்டிக்கொள்கின்றேன். ஒரே நிமிஷம்.

காவற்காரன் :—ஏன் வீணே வேண்டுகின்றாய். எனக்கிட்ட உத்தரவு அப்படி.

ரோலா:—இப்பொழுது ஒரு தூதன் உள்ளிருந்து வருவதைத்தான் கண்டேனே.

காவற்காரன்:—அவன் உத்தரவுச்சீட்டுப் பெற்று வந்ததால் உள்ளேவிட்டேன்.

ரோலா:—இந்தத் தங்கக்கட்டியைப் பார்—இவ் வைர மணிகளைப்பார். இத்தனையும் உனது. உனக்கும் உன் மக்களுக்கும் இவ்வளவு பொருள்—கனவிலும் நினைத்திருக்கமாட்டாய்—எடுத்துக்கொள்—உனக்கே—ஒரு கணம் என்னை—அலான்ஸோவினுடன்மாத்திரம் விட்டுவிடு.

காவற்காரன்:—போ! போ! இலஞ்சங்கொடுத்துக் கெடுக்கப் பார்க்கின்றனையோ என்னை! எனது கடமை எனக் கின்னதென்று தெரியும்.

ரோலா:—வீரனே! உனக்கு மனைவியொருத்தி இருக்கின்றாளா?

காவற்காரன்:— இருக்கின்றாள்.

ரோலா:—குழந்தைகள்?

காவற்காரன்:-நான்கு திவ்யபுத்திர இரத்தினங்கள்.

ரோலா:—அவர்களை எங்கு விட்டுவிட்டு வந்திருக்கின்றாய்?

காவற்காரன்:-என் கிராமத்தில். ஏன்! நான் பிறந்த குடிசையிலேயே.

ரோலா:—உன் மனைவிமக்கள்மேல் உனக்கு ஆசையுண்டோ?

காவற்காரன்:—என்ன! ஆசையுண்டோவா! — கடவுளுக்கே தெரியும் — ஆம், ஆசை உண்டு.

ரோலா:—நல்லது, போர்வீர, இவ் வன்னியநாட்டில் நீ இவ்விதம் கொடியதோர் மரணமடையவேண்டி விதிவசத்தால் நேர்ந்ததென்றுசற்றுஎண்ணிக்கொள்; உனது கடைசிவிருப்பம் யாவதாயிருக்கும்?

காவற்காரன்:—என் நண்பர்களுளொருவன் எனது வாழ்த்துமொழிகளை ஏந்திச் சென்று அவர்களுக்குச் செலுத்தவேண்டு மென்பதுதான்.

ரோலா:—நன்று—அந்தநண்பனே உன்னை யடைத்திருக்கும் சிறைவாயிலில் வந்துநிற்க-காலையில் உள்ளிருப்பவன் வதையுண்ணவேண்டியதையும் செவியுற்ற பிறகு—அவனை ஒரு கணங்கூட நீ பார்க்கக்கூடாதென்று தடுத்துவிட்டால்—உனது வாய்மொழியைத் தயங்கிநிற்கும் உன் மனைவிக்குப் பெற்றுச் செல்லும் வகையின்றி வெருட்டினால் — அந்தக் கொடியோனைப் பற்றி நீ என்னதான் நினைப்பாய்?

கவற்காரன்:—எப்படி! எப்படி!

ரோலா:-அலான்ஸோவிற்கு ஒரு மனைவியும் குழந்தையும் இருக்கின்றார். நான் அவனது வாய்மொழியை ஏற்றுச்செல்ல வந்திருக்கும் நண்பன்.

காவற்காரன்:—உள்ளே போ.

(ஒரு புறமாய்ப் போய்விடுகின்றான்)

ரோலா:—ஹா! மானுடத் தன்மையே! உன்னை உதவிக்குக் கூப்பிட்டும் வாயிழந்தவர்களுண்டா! கானவாசியோ, நாட்டுவாசியோ, எவனாயிருப்பினும் உயிர் உடல் தரித்த பிராணியெதுவும் மனைவிமக்களாகிய பாசக் கயிற்றைப் பிடித்திழுத்தால் வாஞ்சை மேலிட்டுத் தலைவணங்காத திவ்வுலகி லில்லை. எஃகனைய வன்சிறகுகொண்டு புயற்காற்றைப் பிளந்துசெல்லும் உதிரவாய்க் கழுகிற்குங்கூட அதன் இதயத்திற்கருகிருக்கும் இறகு இலவம்பஞ்சியினும் மெல்லியதுதா னன்றோ! இளகிய மணிப்புறா அக் கழுகினும் மிகுந்த ஆசையுடன் தன் குஞ்சுகளை ஆதரிக்கின்றதோ!— ஆம், அதோ போய்விட்டான்—வாயிற்படி கடந்து. — அலான்ஸோ! அலான்ஸோ! நண்ப! ஹா! அயர்ந்த நித்திரை! அலான்ஸோ! எழுந்திரு!

[அலான்ஸோ வருகின்றான்]

அலான்ஸோ:—(உள்ளே) என்ன! என் வேளை வந்துவிட்டதா? நல்லது. (வெளி வந்து) உயிர்துறக்கக் காத்திருக்கின்றேன்.

ரோலா:—அலான்ஸோ, அறியாயோ என்னை.

அலான்ஸோ:—அது—யார் குரல்?

ரோலா:—ரோலாவினது.

[ரோலா தன் வேடத்தைக் களைகின்றான்]

அலான்ஸோ:—ரோலா! மெய்ந்நண்ப!—(அவனைத் தழுவிக்கொண்டு) என்ன! நீ எப்படி வாயிற்காப்போனைக் கடந்து வந்தனை—இவ்வேடம்—

ரோலா:—வார்த்தையாடிக் கழிக்க அரைக்கணமுமினியில்லை என் நண்ப. நான் வரும்வழியில் கிடந்தவொரு துறவியின் பிணத்தினின்று கழற்றித் தரித்து வந்தேன் இவ்வுடையை. இதுதான் எனக்கு உள்ளே வர உதவியாய் நின்றது—இதோ இதையே புனைந்துகொண்டு நீ வெளியே போய்விடு, போய்விடு!—பறக்க வேண்டும்.

அலான்ஸோ:—ஆம்—ரோலா?—

ரோலா:—உனக்குப் பதிலாக இங்கே இருப்பான்.

அலான்ஸோ:—சரி! சரி! எனக்குப் பதிலாக இறந்துமே தீர்ந்திடுவான்! இல்லை! இல்லை! இதைவிடக் கொடுநரகம் என்னை வதைத்துண்ணட்டும்.

ரோலா:—நான் சாகமாட்டேன் அலான்ஸோ! பிஸாரோ தேடுவது உன் உயிரைத்தான், ரோலாவினதை யன்று; நீ வெளிச்சென்று என்னை மிக விரைவில் சிறைமீட்டியும் சிறக்கலாமே. மற்று வேறாக முடிந்தாலும்—நானென்ன, மணற்பாங்கில் உலர்ந்து நிற்கும் தனிவாழை தானே! நான் ஆதரிக்கவேண்டியவர் ஒருவருமில்லை. நீயோ ஒருத்திக்குக் கணவனும்,

குழந்தை யொன்றிற்குத் தந்தையாயு மிருக்கின்றாய். அவ்விருவரும் உன துயிரையே ஆதாரமாகப் பற்றி வாழ்கின்றனர். அலான்ஸோ, போ! போ! போய்விடு. உன்னையே காப்பாற்றிக்கொள்வதற்காக வல்லாவிடினும் கோராவுக்கும் குழந்தைக்கு மாகவாவது, போ.

அலான்ஸோ:—என துயிர்த் தோழ! என்னை நீ இவ்விதம் தூண்டவேண்டா. மனவமைதியுடன் உயிர் நீங்கச் சித்தமா யிருந்துவிட்டேன்.

ரோலா:—மனவமைதி எங்கிருந்து வரும்? உன்னையே ஆராதிக்கும் ஒருத்தியைத் துக்கக்கடலில் ஆழ்த்திக் கொன்றபிறகா! இதைக் கேள். நானவளை விட்டு வரும்போது அவளிருந்த நிலைமையை நினைக்குங்கால், நீ விரைவினில் மீண்டாலன்றி எல்லாம் விபரிதமாய் முடியுமென்பதற்கு ஐயமில்லை.

அலான்ஸோ:—ஓ தெய்வமே!

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[290-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

(வேறு)

139. வெற்றி வெண்குடை விஞ்சையர் வேந்தவ
னொற்றை யந்தனிக் கோலுல கோம்புநாள்
குற்ற மாயதொன் றுண்டு குணங்களால்
அற்ற கீழுயிர் மேலரு ளாமையே. 22.

விஞ்சையர் வேந்தன் - அவ்வித்தியாதர மன்னனுடைய, வெற்றி வெண் குடை - வெற்றிக்குறியான வெண்குடையும், ஒற்றைத் தனிக் கோல் - ஒப்பற்ற ஒற்றைச் செங்கோலும், உலகு ஓம்பு நாள் - உலகத்திலுள்ள உயிர்களைப் பாதுகாத்து வந்தகாலத்தில், குற்றம் ஒன்று ஆயது உண்டு - அவனிடத்தில் குற்றமாகிய செயலொன்று பொருந்தியிருந்தது உண்டு. (அஃதாவது), குணங்கள் அற்ற கீழ்உயிர் மேல் - நற்குணங்களின்றித் தீயகுணங்களையேயுடைய) கீழ்மக்களின்மீது, அருளாமையே - கண்ணோட்டம் வையாது அவர்களை ஒறுத்ததேயாம்.

'ஒற்றைக்கோல்' என்றது அவனையன்றி வேறு மன்னரெவரும் இல்லை யென்பதையும், 'தனிக்கோல்' என்றது அவன் முறைசெய்து அரசுபுரிந்ததின் ஒப்பற்ற தன்மையையும் குறித்து நின்றன. அம், ஆல் அசை.

இங்குக் குற்றமென்றது, அவனது அரசாட்சி முறையின் குணத்தையே விளக்கலால் இது வஞ்சகப் புகழ்ச்சியணி.

140. செம்பொ னீண்முடி யான்செரு வின்றலை
வெம்பு வேலவன் விஞ்சையர் மண்டிலம்
நம்பி யாள்கின்ற நாளி னடுங்கின
கம்ப மாடக் கதலிகை போலுமே. 23.

செம்பொன் நீள் முடியான் - செம்பொன்னாற் செய்யப்பட்ட நீண்ட கிரீடத்தை யணிந்தவனும், செருவின்தலை - போரின்கண், வெம்பு வேலவன் - கொதிக்கும் வேலை ஏந்தியவனுமாகிய, நம்பி - ஆடவர்களிற் சிறந்த அவன், விஞ்சையர் மண்டிலம் - வித்தியாதரவுலகத்தை, ஆள்கின்ற நாளில் - அரசுபுரிந்துவந்த காலத்தில், நடுங்கின - (அவனது நாட் அஞ்சி நடுங்கியவை, கம்ப மாடக் கதலிகையே- ரிசைகளையுடைய மாளிகைகளின் மேலி ய கொடிகளே, போலும் - ஆகும்.

முடியான், வேலவன், நம்பி, பண்புத்தொகை. மண்டிலம், மண்டலம், வட்டமாகிய நிலப்பரப்பு. ஈற்றிலுள்ள ஏகாரத்தைக் கதலிகையோடு கூட்டிப் பிரிநிலைப்பொருளிற் கொள்க. அடுத்த பாட்டுக்கும் இம்முடிபே ஒக்கும். இது ஒழித்துக்காட்டணி.

141. மின்னு வார்ந்த மந்தார விளங்கிணர்
துன்னு தொன்முடி யானொளி சென்றநாள்
மன்னு மாடவர் மேல்வளைந் திட்டன
பொன்ன னார்புரு வச்சிலை போலுமே. 24.

மின்னுவார்ந்த-ஒளிநீண்ட,மந்தார விளங்கு இணர்- மந்தாரமலர்க் கொத்துக்கள், துன்னு - சேர்ந்த, தொல் முடியான் - பழமையான கிரீடத்தை அணிந்தவனாகிய அவனுடைய, ஒளி-செங்கோலாணை,சென்ற நாள் - எங்கும் பரவியிருந்த அந்நாளில், மன்னும் ஆடவர் மேல் - அந்நாட்டில் நிலைத்துவாழ்ந்த ஆண் மக்களின் மேல், வளைந்திட்டன - வளைந்து கணைகளை எய்தவை, பொன் அனார் - திருமகளையொத்த மகளிர் தம், புருவச்சிலையே போலும் - புருவமாகிய வில்லே ஆகும்.

மின்னு - மின், மின்னுதல், உகரவீற்றுத் தொழிற்பெயர். ஒளி - அரசர்களிடத்து உள்ளதோர் தெய்வத் தன்மை.

உறங்கு மாயினு மன்னவன் தன்னொளி
கறங்கு தெண்டிரை வையங் காக்குமால் (248)

என்ற சிந்தாமணியடிகளின் கருத்தைத் தழுவி,

இளையர் இனமுறையா ரென்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும். (698)

என்ற திருக்குறளுரையில் 'ஒளி' என்பதற்கு இவ்வாறு பொருள்கூறினார் பரிமேலழகர். ஒளி - புகழ் என்றுமாம்.

142. வெண்ணி லாச்சுட ருந்தனி வெண்குடை
எண்ணி லாப்புக ழானினி தாண்டநாள்
உண்ணி லாப்பல வாயுள வாயின
கண்ண னாரொடு காமக்க லங்களே. 25.

வெண் நிலாச் சுடரும் - வெண்மையான நிலவொளியை வீசும், தனி வெண்குடை - ஒப்பற்ற வெள்ளைக்குடையையுடைய, எண் இலாப் புகழான் - இவ்வளவினதென்று நினைத்தற்குமரிய பெரும் புகழாளனான அவன், இனிது ஆண்டநாள் - துன்பமேதுவும் இன்றி நன்றாக அரசுபுரிந்துவந்த காலத்தில்,கண்ணனாரொடு-கண்போன்றஇனியாரோடு கூடி, உண்ணிலா - உணவைப் பெற்று உண்கிலாத, வாயுள ஆயின - வாய்களை உடையனவாய் இருந்தவை, பல காமக் கலங்களே - பல பரத்தை மகளிரே.

'உண்ணிலாப் பலவாய்' - சிலேடை :— (1) உணவைப் பெறாது பசியால் வருந்திய வாய், (2) ஆடவரால் அதரபானம் செய்யப்பெறாத வாய். காமக்கலன்- காமக்கலம் - பரத்தையர்; ஆடவர் காமத்தை உண்பதற்கேற்ற பாத்திரம் போறலின் - 'காமக்கலன்'என்பதைக் காமக்கப்பலெனக் கொண்டு பரத்தையரைத் தேவர் சிந்தாமணியில் இவ்வாறு வருணித்திருக்கிறார்

அள்ளற் சேற்று ளலவன் அடைந்தாங் கனைய மெய்யிற்
கள்செய் கடலு ளிளமைக் கூம்பிற் கடிசெய் மாலைத்
துள்ளு தூமக் கயிற்றிற் பாய்செய் துயரி நிதியம்
உள்ளு காற்றா வுழலுங் காமக் கலனுங் காண்மின். (929)

143. மாக்கள் வைய மகிழ்ந்துதன் றாணிழல்
நோக்கி வைக நுனித்தவ னாண்டநாள்
தாக்க ணங்கனை யார்தம தாயரால்
வீக்கப் பட்டன மென்முலை விம்முமே. 26.

வையமாக்கள் - அவ்வித்தியாதர வுலகத்திலுள்ள சனங்கள், தன் தாள் நிழல் நோக்கி - தனது அடிநிழலையுற்று அதன் கீழ், மகிழ்ந்து வைக - தங்கி மகிழ்வுறுமாறு, நுனித்து - (நீதிநரும முதலியவற்றை மந்திரிமாருடன்) நன்றாராய்ந்து, அவன் ஆண்டநாள்- அவன் அரசுபுரிந்துவந்த காலத்தில், தம தாயரால் - தமது தாய்மார்களால், வீக்கப்பட்டன - கச்சினாற் கட்டப்பட்டனவாகிய, தாக்கணங்கு அனையார் - திருமகளைப் போலப் பேரழகு வாய்ந்த மகளிருடைய, மென்முலையே - மென்மையான முலைகளே, விம்மும் - விம்மினவாம்.

தாயர் - பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செய்வகையறிந்து போற்றுஞ் செவிலித்தாயாகிய ஐவகைத்தாயர். முன்பாட்டுக்களின் முடிபுக் கேற்ப, 'விம்முவன மென்முலையே' என்று இருக்கற்பாலது 'மென்முலை விம்முமே' என்று வந்துளது. விம்மும் - சிலேடை (1) அழுதல், இரங்குதல் (2) கட்டுக்குள் அடங்காது பருத்தெழுதல்.

144. வடிய வானவ னாளவும் வாய்களிற்
கடிய வாயின கள்ளவிழ் தேமலர்
அடிய வாய்ப்பயப் பட்டடங் காவலர்க்
கொடிய வாயின கொங்கவிழ் சோலையே. 27.

வடிய - திருத்தமான,வான்அவன் ஆளவும் - ஆகாயத்திலுள்ள வித்தியாதரவுலகை அவன் (முறை செய்து) ஆண்டாலும், வாய்களிற் கடியவாயின - வாய்களிற் கடுஞ்சொல்லைக் கூறுபவை ஆயின, கள் அவிழ் தேமலர் - வண்டுகள் குடைந்து இதழை விரிக்கும் தேனையுடைய மலர்களே. அடியவாய் - அடிகளைத் தாங்கி, பயப்பட்டு - அஞ்சி, அடங்கா - அடங்காதனவாய், அலர்-பிறர்கூறும் வசைச்சொற்களை ஏற்று, கொடிய ஆயின - கொடிய செயல்களைச் செய்பவை ஆயினவை, கொங்கு அவிழ் சோலையே - (அந்நாட்டில்) நறுமணம் வெளிப்பட்டு விரியும் சோலைகளேயாம்.

வடிய - வடி (திருத்தம்) என்னும் பெயரடியாகப் பிறந்த பெயரெச்சம். வானுக்கு இவ்வடைமொழி பொருத்தமாகத் தோன்றவில்லை. 'வடிய வாளவன்' (கூர்மையான வாளையுடைய அவன்) என்று பாடத்தைத் திருத்திக்கோடலே நேராம். வாய்களிற் கடிய-(சிலேடை) தம்மிடத்தே வாசனையைக் கொண்டன, என்பது மற்றொரு பொருள். தேமலர் - தேன் மலர். அடியவாய், பயப்பட்டு, அடங்கா அலர்க் கொடிய - (சிலேடை) அடிப்பக்கங்கள், நீரிலே தோய்ந்து, தாங்கமாட்டாத பூக்களைக் கொண்ட கொடிகளோடு கூடிய சோலை, என்பது மற்றொரு பொருள்; பயம் - நீர். பயப்பட்டு - பழங்கள் (மரங்களில்) உண்டாகப்பெற்று என்றுமாம்; பயம் - பயன், பழம்.

145. மாய மாயநின் றான்வரை மார்பிடை
மேய பூமகள் போல விளங்கினாள்
தூய வாமுறு வற்றுவர் வாயவள்
வாயு வேகையென் பாள்வளர் கொம்பனாள். 28.

மாயம் மாய நின்றான்-வஞ்சகம் சூது முதலிய தீச்செயல்களெல்லாம் மாய்ந்து கெடும்படி செங்கோல் செலுத்திநின்ற அம்மன்னனுடைய, வரை மார்பிடை - மலைபோன்று அகன்றுயர்ந்த மார்பினிடத்தில், மேய பூமகள்போல - பொருந்தி வாழுந் திருமகளைப்போல, தூயவாம் முறுவல் - களங்கமின்றிச் சுத்தமான பற்களோடு கூடிய, துவர் வாயவள்- செவந்த வாயையுடையவளும், வளர் கொம்பு அனாள் - காமம் ஏறிப் படர்ந்து வளர்வதற்காக நாட்டப்பட்ட கொம்பு போன்றவளுமான, வாயுவேகை என்பாள் - 'வாயுவேகை' என்னும் பெயரையுடைய மங்கை, விளங்கினாள் - விளங்கினாள்.

இவள் அவன் மனைவியாகி அவனது மார்பகத்தே குடிகொண்டு உறைபவளானாள், என்பது முதலீரடிகளின் கருத்து. 'மாயமாயநின்றான்...பூமகள்போல' என்பதை ஒரே தொடராக்கி, மாயங்கள் யாவும் தன்னிடத்தே நிலைபெற்ற மாயோனாகிய திருமாலின் மார்பிடைத் திருமகள்இடைவிடாது உறைவதுபோல, என்றுரைத்தலும் ஒன்று. இப்பொருளுக்கு, 'இம் மன்னன் மார்பிடை' என்பதை வருவித்துரைக்க. வளர் கொம்பனாள்' - நன்றாய் வளர்ந்த பூங்கொம்பு போன்றவள், என்றுமாம்.

146. பைம்பொற் பட்ட மணிந்தகொல் யானையா
னம்பொற் பட்ட நறுங்குழ லார்க்கெலாம்
செம்பொற் பட்டஞ் செறிந்த திருநுதல்
அம்பொற் பட்டுடை யாளணி யாயினாள். 29.

செம்பொன் பட்டம் செறிந்த - செம்பொன்னாற் செய்த பட்டம் பொருந்திய, திருநுதல் - அழகிய நெற்றியோடு கூடியவளும், அம் பட்டு உடையாள் - அழகிய பட்டுச்சேலையை உடுத்தியவளும் ஆகிய அவள், பைம்பொன் பட்டம் அணிந்த - பசும் பொன்னாலாகிய நெற்றிப்பட்டம் அணியப்பெற்ற, கொல் யானையான் - (பகைவரைக்) கொல்லும் யானைப் படையையுடைய அவ்வரசனுடைய, அம்பொன் பட்டம் - அழகிய பொன்னாற் செய்யப்பட்ட சில்லென்னும் அணியையுடைய, நறுங்குழலார்க்கு எல்லாம் - நன் மணத்தோடு கூடிய கூந்தலையுடைய தேவி

மார்க்கெல்லாம், அணி ஆயினள் - சிறந்து மேம்பட்டு விளங்குபவள் ஆயினள்.

பைம்பொன், அம்பொன், செம்பொன் எல்லாம் ஒன்றே. பட்டம்-பொன், அல்லது வெள்ளித் தகட்டாற்செய்து நெற்றியில், அல்லது தலையில், அணியும் ஒருவகையணி. தலையிற் சூடும் பட்டத்துக்குச் 'சில்,' என்று பெயர். இவளைப் பட்டஞ் செறிந்த திருநுதலாள் என்றது இவள் பட்டமகிஷி என்பதைக் குறிக்க.

147\. கோவை வாய்க்குழ லங்குளிர் கொம்பனாள்
காவி வாணெடுங் கண்ணியக் காவலற்
காவி யாயணங் காயமிழ் தாயவன்
மேவு நீர்மைய ளாய்விருந் தாயினள். 30

கோவை வாய் - கொவ்வைக் கனியைப்போலச் செவந்த வாயையுடைய, குழல் அம் குளிர் கொம்பு அன்னாள் - கூந்தலோடு கூடிய அழகிய குளிர்ந்த பூங்கொம்பைப் போன்றவளாகிய, காவி வாள் நெடுங் கண்ணி - (நிறத்தால்) கருங்குவளையையும் (கொல்லுந் தொழிலால்) வாளையும் போன்ற நீண்ட கண்களையுடைய அவள், அக்காவலற்கு - அந்த மன்னனுக்கு, ஆவியாய்(இன்றியமையாமையால்) உயிராயும், அணங்காய் - (பிரிந்தகன்ற காலையில் உயிரை வாங்கும்) நோயாயும், அமிழ்தாய்-(கூடிய காலத்தில், உயிரைத்தரும்) அமிர்தமாயும், அவன் மேவும் நீர்மையாள் ஆய்-அவன் விரும்பிக் கூடுந் தன்மையளாய், விருந்தும் ஆயினள்-(நாள்தோறும் நானாவித புத்தின்பத்தை அளித்தலால்) சிறந்த புத்துணவும் ஆயினள்.

இப்பாட்டோடு

வெங்களி விழிக்கொரு விழவு மாயவர்
கண்களிற் காணவே களிப்பு நல்கலால்
மங்கையர்க் கினியதோர் மருந்து மாயவன்
எங்கணு யகர்க்கினி யாவ தாங்கொலோ

(மிதிலைக்...33)

என்ற கம்பராமாயணச் செய்யுள் ஒப்பிட்டு ஆராய்வதற்குரியது.

148\. முருக்கு வாயவண் முள்ளெயிற் றேர்நகை
உருக்க வேந்தன் ஒருங்குறை கின்றநாள்
பெருக்க மாகப் பிறந்தனன் பெய்கழல்
அருக்க கீர்த்தியென் பானலர் தாரினான். 31

முருக்குவாய் அவள் - முள்முருக்க மலரைப் போன்று செவந்த வாயையுடைய அவளது, முள் எயிற்று ஏர் நகை - கூர்மையான பற்களின் அழகிய புன்சிரிப்பு, உருக்க- தன்மனதை உருகும்படி செய்ததால், வேந்தன்-அரசன், ஒருங்கு உறைகின்ற நாள் - பிரியாது அவளுடன் ஒன்றாகக்கூடி இன்புற்றிருந்த நாளில், பெய்கழல் - கட்டிய வீரக்கழலோடு கூடிய, அலர்தாரினான்-அலர்ந்த பூமாலையை அணிந்தவனை, அருக்ககீர்த்தி என்பான் - அருக்ககீர்த்தி என்னும் பெயர்வாய்ந்த மகன், பெருக்கம் ஆக - தன்னால் தனது குலத்துக்குச் செல்வப்பெருக்கு முதலிய உண்டாம்படி, பிறந்தனன் - பிறந்தான்.

முருக்கு - முள்முருக்கமரம்; இதன் மலர் மிகச் செவந்திருக்கும். ஒருங்கு - ஒன்று சேர்ந்து, உடல் பொருந்தக் கூடி.

யாப்பிலக்கணம்

தொடை—மோனை

[292-வது பக்கத் தொடர்ச்சி]

எழுத்துக்களால் ஆகிய சீர்கள் தளையுற இணைந்து அடிகளாய்த்தொடர்ந்து ஓசைநயமும் பொருளின் சுவையும் வாய்ந்து பயனும் உடைத்தாய் அமைவது செய்யுள்.

செய்யுள்களின் அடிகளேனும், அடிகளிலுள்ள சீர்களேனும் தொடுத்துவரும் அமைப்பினைத் தொடை என்பர். இந்தத் தொடைகள், மோனைத்தொடை எதுகைத்தொடை முரண்தொடை இயைபுத்தொடை அளபெடைத்தொடை, என ஐந்து வகைப்படும். இனி இவ்வைவகைத்தொடை ஒவ்வொன்றிற்கும், அடி இணை பொழிப்பு ஒரூஉ கூழை மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் முற்று, என எட்டு விகற்பங்கள் உள. எனின் எண்ணைந்து - நாற்பது வகைகளில் தொகைகள் அமையலாம் என்பது புலப்படும். இவையன்றி அந்தாதித்தொடை இரட்டைத்தொடை செந்தொடை எனப் பிற தொடைகளும் உள. இவையனைத்தையும் இப்பொழுது பயில முயலவேண்டா. எனினும், செய்யுளமைப்பில் மோனை எதுகை என்னும் இவ்விரண்டு தொடைகளாயினும் உறுப்புக்களாய்த் தோன்றவேண்டுமென்பது பெரும்பாலும் மரபாயிருத்தலால், மோனை என்பதும் எதுகை என்பதும் என்ன வென்று தெரிந்துகொள்வதற்கு வேண்டிய மட்டும் இங்கு உரைப்போம்.

மோனை:—

ஒரு செய்யுளின் முதலடியின் முதலில் வந்த எழுத்தே பின்வரும் பலவடிகளில் அமைந்திருப்பதை மோனை என்பர்:—

மானிட ராக வரலரி தோர்மண் டலத்தினெறி
மானிட ராக பிலாகவ ராதன் மலரயனார்
மானிட ராகமத் தாலன்ப ராய வரங்கத்துளெம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே.

[இந்த உலகத்தில் மனிதராய்ப் பிறத்தல் மிக அருமை. அப்படிப் பிறந்தாலும், குறையற்ற சரீரம் உடையவர் ஆதல் அருமை. அப்படி ஆயினும், ஈதிமானாவது அருமை. அப்படி ஆனாலும், தாமரை மலரிலுள்ள பிரம்மனும், மானை இடக் கையில் உடைய சிவபிரானும், சாஸ்திரப்படி பக்தர்களாகி வழிபடுவதற்கிடமான திருவரங்கத்தில் கண்வளரும் எம் பெருமானது பெருமைவாய்ந்த சிவந்த தாமரைபோன்ற பாதங்களுக்கு ஆள்செய்யும் வாழ்க்கையை எய்துவது மிக அரியதே]

இந்தச் செய்யுளின் ஒவ்வொரு அடி முதலிலும் மா என்னும் எழுத்தே வந்திருப்பதால் இதனில் மோனைத்

தொடை அமைந்திருக்கின்றது. இப்படி ஒரு செய்யுளின் முதலடியின் எழுத்துக்கள் ஒன்றி வருவதை அடிமோனை என்றழைப்பர். இவ்வாறு அடிமோனைத் தொடைபெற்றுச் செய்யுள்கள் நடப்பது மிக மிக அருமை. ஆனால், எல்லாச் செய்யுள்களிலும் அமைந்திருக்க வேண்டுமென்றே சொல்வதற்குரிய மோனை வேறு. அது யாதெனில், செய்யுளடி ஒன்றின் முதலில் வந்த எழுத்து அவ்வடியிலுள்ள சீரொன்றிலேனும் பலவிலேனும் முதலெழுத்தாய் அமைய வேண்டுமென்பதாம். மோனை என வழங்குவது பெரும்பான்மை இதனையே.

கல்லாத மாந்தருக்குக் கற்றறிந்தார் சொற்கூற்றம்.

என்னும் செய்யுளடியின் முதலில் க என்னும் எழுத்து நிற்க, மீண்டும் அவ்வெழுத்தே 'கற்றறிந்தார்' என்னும் வேறோர் சீரின் முதலாகி வந்ததால் இது மோனைத்தொடை. இவ்வடியில் மோனை எழுத்து இரண்டு சீர்களில் வந்தது.

பித்த யானை பிணங்கிப் பிடியிற்கை

என்ற அடியின் முதலெழுத்தாகிய பி என்பதே பின்னும் இரண்டு சீர்களுக்கு முதலெழுத்தாக அமைந்திருப்பது காண்க.

மானு மாதரும் மாமயின் மாட்சியும்

என்னும் அடியிலுள்ள எல்லாச் சீர்களின் முதலெழுத்துக்களும் ஒன்றி வந்திருக்கின்றன. இப்படி எல்லாச் சீர்களிலும் ஒன்றி வருகின்ற மோனையை முற்றுமோனை என்பர்.

செய்யுளின் ஒவ்வொரு அடியிலும் இப்படியே அடிதோறும் முதல்நின்ற எழுத்து அவ்வவ்வடியின் கண் ஒன்று அல்லது பல சீர்களின் முதலாக வந்து மோனைத்தொடை அமையும்:—

சேந்தாமரைப் பொகுட்டிற் செம்மாந்து வீற்றிருக்கும்
நந்தா விளக்கை நறுந்தா ழிளங்கொழுந்தை
முந்தா வுலகு முயிரு முறைமுறையே
தந்தாளை நோக்கினான் றன்னைப்பொன் னில்லாதான்.

இந்தச் செய்யுளின் முதலடியில் சே என்னும் எழுத்தும், இரண்டாம் அடியில் ந என்னும் எழுத்தும், மூன்றாமடியில் மு என்னும் எழுத்தும், நான்காம் அடியில் த என்னும் எழுத்தும் மோனைகளாக வந்திருக்கின்றன.

குறிப்பு:—ஒன்று கவனிக்கவேண்டும். மூன்றாவது அடியில் 'முயிரு' என்னும் மூன்றாஞ்சீரின் முதலிலுள்ள முகரம் மோனை எழுத்தன்று. நான்காஞ் சீராகிய 'முறைமுறையே' என்பதன் முதலிலுள்ள முகரந்தான் மோனை எழுத்து. உலகும் + உயிரும் = உலகு முயிரு எனப் புணர்வதால், இந்த மூன்றாஞ்சீர் முதல்வரும் முகரத்திலுள்ள மகர மெய் உண்மையில், உலகும் என்னும் முன் சீரின் ஈற்றைச் சேர்ந்தது. ஆதலின், முயிரின் என்னுஞ் சீரின் முதலில் இருப்பது உகரமே என நினைத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் புணர்ச்சியினால் மாறுபட்டு நிற்பதைக்கண்டு மயங்கலாகாது. புணர்ச்சிவிதிக்கிணங்கி மாறுமலிருக்குமானால் எவ்வெழுத்து சீரிற்கு முதலில்நிற்குமோ அவ்வெழுத்து அடியின் முதலெழுத்தோடு ஒன்றினாற்றான் மோனை அமையும். இப்படித் தம் உரிமையின் நிற்கின்ற சே என்னும் மூன்றாஞ்சீர் முதலெழுத்து முதலடியிலும், ந என்னும் மூன்றாஞ்சீர் முதலெழுத்து இரண்டாமடியிலும் மோனை எழுத்துக்களாய் வந்திருக்கின்றன. மூன்றாமடியில், மூன்றாஞ்சீர்முதலில் நிற்கின்ற முகரம் புணர்ச்சியாலானதால் அது மோனையாகாமல் நாலாஞ் சீர் முதலிலுள்ள முகரமே மோனையாயிற்று.

"வந்துள வரசரை வழுத்தி நோக்கினான்"

என்னும் அடியின் முதற்கண் நிற்கும் எழுத்து வ என்பது. இரண்டாஞ் சீராகிய 'வரசரை' என்பதன் முதலில் உள்ள வகரம் அதற்கு மோனையாகாது. ஏனெனில் வந்துள + அரசரை, என்பது 'வந்துள வரசரை' என வகர உடன்படுமெய் பெற்றுப் புணர்ந்திருப்பதால், உடன்படுமெய்யாகப் புணர்ச்சியில் வந்த அவ் வகரமெய்யை நீக்கிநோக்கினால் அச்சீரின் முதலில் உள்ள எழுத்து 'அ' என்றே கொள்ளற்குரியதாயிருக்கின்றது. எனவே அது இங்கு மோனை ஆகாது. அதற்கு அடுத்த சீராகிய 'வழுத்தி' என்பதன் முதலில் உள்ள வகரமோ, புணர்ச்சியாலன்றி இயல்பின் நிற்கின்ற வகரமாதலால் அதுவே மோனை எழுத்தாகக் கருதற்குரியது.

'யானையை வென்று யாதி யாதலால் வீரன் நீயே' என்னும் ஓர் அடியைப் பார்ப்போம். அடியின் முதலில் உள்ள எழுத்து யா என்பது. மூன்றாஞ்சீர் முதலிலும் நான்காஞ்சீர் முதலிலும் யா என்னும் எழுத்து நிற்கின்றதாயினும் அவை இரண்டும் மோனை எழுத்துக்கள் ஆகா. ஏனெனில், அவையிரண்டும் இயல்பின் நிற்கின்ற யாகாரங்கள் அல்ல. வென்று + ஆதி = வென்றுயாதி, எனப் புணர்ந்திருப்பதால், 'யாதி' என்னும் மூன்றாஞ்சீரின் முதலில் உள்ள எழுத்து உண்மையில் ஆ என்பதே. மற்று, ஆதி + ஆதலால் = ஆதி யாதலால், எனப் புணர்ந்திருப்பதால், 'யாதலால்' என்னும் நான்காஞ்சீரின் முதலில் புணர்ச்சியால் வந்த யகர உடன்படுமெய் நீங்க, நின்றதும் ஆ என்பதே. ஆகையால் இந்த அடியில் மோனையே இல்லை என்ன வேண்டும். இவ்வாறன்றி,

யானையை வென்ற வீரன் யாண்டுள னென்னக் கேட்டான்—என்னுங்கால், நான்காஞ்சீர் முதலிலுள்ள யாகாரம், 'யாண்டு' என்னுஞ் சொல்லில் இயல்பின் நிற்கின்ற எழுத்தாகையால் அது மோனை எழுத்தாகும்.

188914

துன்னிவந் துவந்த மாதர் துளங்கொளி முறுவல் கோட்டி—என்னுமிவ்வடியில், இரண்டாஞ்சீர் முதலிலுள்ள துகரம் மோனை எழுத்தன்று. வந்து + உவந்த, = வந்துவந்த, எனக் குற்றியலுகரப் புணர்ச்சியால் ஆயிருப்பதால், அது இயல்பின் நிற்கின்ற துகரம் அன்று. ஆதலின் அது மோனை எழுத்து ஆவதற்கில்லை. 'துளங்கொளி என்னும் நான்காஞ்சீர் முதலிலுள்ள துகரமே மோனை எழுத்தாம்.

சீரின் முதலில் நிற்கின்ற எழுத்து எதுவாயினும் அதுகண்டு மயங்காமல் அச்சீரின் முதலிற்கு இயல்பின் உரியதாய எழுத்தையே கருத்திற்கொண்டு மோனை அமைவதை உணர்தல்வேண்டுமென்றுஉரைத்திருப்பதால், எழுத்துக்கள் உருவத்தில் ஒன்றாயிருப்பினும் மோனை யமைவதற்கு இயலாது போகக் கூடும் என்பதைக் கற்கலாயினீர். இனி, இதற்கு மறுதலையாய ஒன்றும் இவ்விதியில் அடங்குவதையும் கற்கவேண்டும். அது யாதெனில், புணர்ச்சியால் திரிந்து நிற்பினும் அவ்வெழுத்துத் திரியாமுன்

இருந்த தன்மையால் மோனையாகக் கூடும் என்பது. முன் உதாரணமாய்க் காட்டிய செய்யுளின்,

தந்தானை நோக்கினன் றன்னெப்பொன் றில்லாதான்,

என்னும் நான்காமடியின் முதலில் இருப்பது த என்னும் எழுத்து. இதற்கு மோனை எழுத்து மூன்றாஞ் சீரின் முதலில் இருக்கின்றது. அது ற வென்னும் எழுத்தானாலும், நோக்கினன் + தன்னெப்பு, = நோக்கினன் றன்னெப்பு, எனப் புணருங்கால் திரிந்துநிற்கின்ற றகரமே ஆவதால், அச்சீரின் முதலில் இயல்பின் நிற்பது தகரமே எனக் கொண்டு மோனை காணுதல் வேண்டும். இப்படியே

நல்லவர்ச் சேர்வரே னண்ணுந் தூய்மையே

என்னும் அடியில்,முதல் நின்ற நகரத்திற்கு மூன்றாஞ் சீர் முதலில் மோனை அமைந்திருக்கின்றது. அது னகரமானாலும், சேர்வரேல் + நண்ணும் = சேர்வரே னண்ணு, மெனப் புணர்ச்சியால் திரிந்த னகரமாதலின், அவ்விடத்திற்கு இயல்பான நகரம்பற்றி அதனை மோனை எனல் வேண்டும்.

நிறைநெடுங் கண்ணு ணின்றங் கழல்கிலாக் கடவுட் காட்சி—என்னும் அடியிலும், புணர்ச்சியால் திரிந்து வந்த ணிகரம் நிற்பினும் (கண்ணுள் + நின்றம்) மூன்றாஞ்சீர் முதலிலே மோனையுளதெனக் கொள்க.

அந்த வரிவையை யணைந்துகொண் டமரர்க ளண்மி-என்னு மிவ்வடியின் முதலிலுள்ள எழுத்து, அ என்பது. மற்றச் சீர்களின் முதலில், வ ய ட ள என வெவ்வேறு எழுத்துக்கள் இருந்தாலும், அவையனைத்தும் இந்த அகரத்திற்கு மோனையாய் நிற்கின்றன. ஏனெனில், அவை யொன்றும் இயல்பின் நிற்கின்ற எழுத்தன்று. "அந்த அரிவையை அணைந்து கொண்டு அமரர்கள் அண்மி" என்பதே புணர்ச்சியால், வகர யகர உடன்படுமெய்கள் பெற்றும், முன்னின்ற மெய்மேலும், உயிர் விட்டோடிய குற்றிய லுகரத்தின் மேலும் ஏறியும் வயடள என நிற்பினும் அவ்வச்சீர்களின் முதலில் இயல்பின் அமைந்த எழுத்து அகரமே. எல்லாச் சீர்களும் மோனை பெற்றிருப்பதால் இது முற்றுமோனை.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[294-வது பக்கத் தொடர்ச்சி]

மீதுரை யோதிய வல்லியல் நாடகம்.

நாவிழந்து நைந்துநின்ற நிருபன்முன், சிற்றவையும் மாற்றவள்மைந்தனும் தத்தம் வாய்கொண்ட வளவு நெட்டுரைகள் வான்மீகி இராமாயணத்தின் கண் நிகழ்த்தினர். "இதனால் நாம் தெரிந்துகொள்கின்ற 'புத்திமதி' என்னவென்றால்......" என முடிகின்ற வோர் ஐந்தாம்வாசக புத்தகத்திற்கு, இது ஏற்றவொரு பாடமாயிருக்கலாம் எனினும், நாடக நயத்திற் கிணங்கியதென்றெண்ணவோ சற்றேனு மிடமில்லை. கம்பர் ஐந்தாம்வாசகப் பாடபுஸ்தகம் வரையவில்லையாதலின் அந்த முறையையும் உரையையும் அடியுடன் மாற்றிவிட்டார். முதனூலின்படி, முடிசூடநின்ற கடிகையில் தான் அடவிக்குக் கடிதேக நேர்ந்தவாறெல்லாம் இராமனுக்குத் தெரியலாயிற்று. தயரதன் உவந்தனன் அல்லனெனினும் இதற்கு உடன்பட்டானென்பதும் இராமன் அறிந்தனன். இதனை அகற்றுவதென்பது இனித் தயரதனால் ஆகாததென்பதும் வெளிப்படை. எனின், சிறிய கோத்தாய் இவள் தனக்கு இழைக்கின்ற கொடுமையைத் தடுக்கத்தான் நினைத்து நெடுமுடி தன் தலையில் கவித்துக்கொள்ளவே விழையினும் ஆகாதொன்று அதுவெனும் நிச்சயமே நிலைக்கப் பெற்றவனாய் நிற்கின்றான்.தீராப்பொறியென் றென்று தீர்ந்தபின் நேராமல் இகலிநடப்பதால் யாது பயன் ! ஆதலின், மாற்றமாட்டாததற்குஇராமன் ஆற்றியிருந்த பெற்றியை வான்மீகி முனிவரது வரலாற்றுவகை குறிப்பதெனக் கொள்வது மியலும். கைகேசிக்கு வரமளித்த வாய்மைக்கு ஆளாகிய ஓர் எளியனாய்த் தயரதன், தன்னைப் புழுங்கிய மனத்தோடு நாட்டினின்று போக்குகின்ற பரிசெல்லாம் வான்மீகத்தில் தெரியக் கேட்டனன் இராமன். கையறக் கலுழ்ந்துநின்ற பார்த்திபன் இளிவரும்படி தன் ஏழ்மையைச் சுமப்பதையுங் கண்டனன். இதன்பின் வனம்புகாது வைகுமாறில்லை.

கம்பராமாயணத்திலே கதையின் கதியும் கருத்தும் முழுவதும் வேறாக நடக்கின்றன. தன்னைக் காட்டிற்குப் போக்குவது கைகேசியின் காரியம் என்பதையேனும், அவள் காரியமே என ஒருவாறு ஊகித்தாலும் அதனை இயற்றும் ஆற்றல் அவளுக்கு வாய்த்தவாறு எவ்வாறென்றேனும், இராமனுக்கு இங்கு உரைத்தவர் ஒருவருமில்லை. ஆதலின் உண்மையைக் கேட்டுணர முயலாமலே இராமனிங்குத் தந்தையின் ஆணை என்ற சொற்களுங்கே உடன்பட்டான். இவ்வண்ணம் உடன்படுதலே பெருமை மிகவுடையது. தானிழைத்த வொருகுற்றத்திற்குத் தண்டனையாயது விதிக்கப்பெற்றிருக்கலாமென்று கருதினவ னல்லன். இதனாற் கைகேசி தனக்கோர் இலாபம் தேடினாள் அல்லள் என்பதை அவன் கருத்தினால் ஆராய்வதும் மிகை. யாது கொற்றவன் ஏவியது அது செய்தலொன்றே தன் கடன் என்னுந் தன்மையனாதல் போக்கி வேறுவேறு சில விளம்பவும் அவன் விழைந்திலன். எது எவ்வாறாயினும், "மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்" என விரைந்தகன்றனன் நம் வள்ளல்.

நெட்டுரைகள் கட்டுரைகளா யமைத லருமை. நெடிது பேசப்பேசச் சொற்களினின்று பொருள் நெகிழுமேயன்றிச் செறியுமாறில்லை. உரைவளர்த் தோயாதார் நாச் சோர்ந்து நொய்தின் மறைசில காட்டிவிடும். வாடியமுகத்தனாய் வீற்றிருந்த வேந்தனைக் குறித்து இராமன், "நீர் கோபத்தினாலாவது செல்வாக்கினாலாவது பிதாவைப் பார்த்துக் கடிந்துபேசியபடியால் அவர் மனம் இவ்வாறு குழப்பம் அடைந்திருக்கின்றதா" எனக் கைகேசியை வினவியதினின்று, பொதுவினும் பொதுவாய பொதுமக்களகவயின் இளையமனைவியால் அல்லற்படும் ஒரு வயோதிகக் கொழுநன் கதியையேஅயோத்தி யரண்மனைக்குள்ளும் காணவேண்டி நேர்கின்றது—நன்றே மன்னன் மனைவாழ்க்கை. தன் அழகின் செருக்கினாற் பன்முறை கைகேசி கோசலையை எளிமைப்படுத்தி யிருக்கின்றாளென்று கூறிய கூனியுடன் இராமனுஞ் சேர்ந்துகொண்டு தயரதனையும் அவள் கடிந்து வைகின்ற வழக்கமுண்டென்பதைத் தூற்றிவிடுகின்றான். இதுவுமன்றி இராமன், தந்தையின் பணியைத் தான் பேணும் தன்மையை,

> "நெருப்பில் குதியென்றால் குதிப்பேன், விஷத்தைக் குடி என்றால் குடிப்பேன், சமுத்திரத்தில் முழுகு என்றாலும் முழுகிவிடுவேன். என் பிதாவின் கட்டளை யென்றால் எனக்குப் போதும். அவர் எப்பொழுதும் எனக்குக் குரு, தந்தை, அரசர்; எனது க்ஷேமத்தையே விரும்புவார்; ஆகையால் அம்மா, தந்தையாருடைய கருத்தைச் சொல்லும்; அவசியம் நான் செய்து முடிக்கிறேன்; பிரதிக்ஞை செய்கின்றேன்"

என விளம்பியதும், தம்பியர்பால் தான் வைத்த நேயத்தைத் தெரிவிப்பானாகி,

> "நானே சீதையையும் இராச்சியத்தையும் விருப்பத்திற்கிடனான உயிரையும் பொருளையும் ஒருவருடைய ஏவலுமில்லாமல் மனமுவந்து எனதுசகோதரர்களுக்குக் கொடுத்துவிடுவேன். உமது வாக்கைக் காக்கும்படி உம்முடைய வேண்டுகோளை நிறைவேற்றிவைக்கும்பொருட்டு அரசரென்னை ஏவினால் பரதனுக்கு நான் கொடுப்பதைப்பற்றிக் கேட்கவேண்டுமா"

என வியந்து சாற்றியதும், தன்னுடைய உயர் குணங்களை எல்லாம்,

> "அம்மா, என்னைப் பொருளாசை கொண்டு உலகத்தில் வாழ்வதற்கு எண்ணங்கொண்டவனாக நீர் நினைக்கவேண்டாம். தருமம் என்பதையே எப்பொழுதுங் கைப்பற்றி இருக்கின்ற என்னை ரிஷிக்கொப்பானவர் என்று எண்ணுவீர். எனது தந்தைக்கு மகிழ்ச்சியை விளைவிக்கப் பிராணனைக் கொடுக்கவெண்டு மென்றாலும் அவ்வண்ணமே செய்வேன்"

என எடுத்தியம்புவதும், இவையனைய பிற பல வாசகங்களும், மீதுரை (Heroics) என்றும், வல்லியல் நாடகம் (Melo drama) என்றும் ஆங்கிலத்தில் பரிகசமாய் இயம்பப்படும். இவ்வண்ணம், வன்மையுடன் மீதுரைக்கும் வாசகங்களால் ஆரவாரஞ் செய்வதை 'இரணியனுக்கு இரணியனாகுதல்' என்ன, Out heroding herod என்று ஷேக்ஸ்பியர் நியமித்த மொழிக்கிணங்கித் தமிழில் அமைத்துக்கொள்வதுந் தகும். இதற்கெதிர், "தந்தையும் தாயும் நீரே தலைநின்றேன் பணிமின்," எனவும்,"மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ" எனவும், "என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ" எனவும் இளகிய குரலால் இராமன் இயம்பியன எத்துணை அழகும் அமைதியும் வாய்ந்தனவாயிருக்கின்றன வென்பதை அறையவும் வேண்டுமோ! உயிர் நிலை தளர்ந்துவாடும் தந்தைக்கும் மாற்றன்னைக்கும் இராமன்,

> "சுக மென்பது எப்பொழுதும் ஒருவனுக்கு ஒரே வண்ணமாய் இருந்துகொண்டிருக்கு மென்பது வெகு அருமை"

என்றும்,

> "இவ்வுலகத்தில் ஒருவனுக்குத் தந்தையாரிடத்துப் பணிந்து பணிவிடைசெய்து அவரதுசொற்படி நடப்பதினும் உயர்ந்த தருமம் வேறொன்றும் இல்லை"

எனவும் செவியறிவுறுத்துஞ் சூழ்ச்சி நகைப்பதற்கே தன்னை இலக்காக்கிக்கொள்வதல்லால் குறித்த பயன் வேறொன் றிலது.

ஓயாது உரைபெருக்குந் திறமையில் இராமனுக்குக் கைகேசி தோற்றவளல்லள். கூறியது கூறலும் இவளுக்குக் குற்றமன்று. தேவாசுர யுத்தத்தில் தான் பெற்ற இருவரங்களில் துவக்கி, வாய்மையின் வலைப்பட்டு மன்னவன் தளர்வதையுங் காட்டி, "அரசினைப் பரதன் ஆள, நீ அடவிக்கு ஏகல் வேண்டும்" என முடிப்பதற்குள் கைகேசி வேண்டாதன எத்தனை வழங்கி யிருப்பாளோ அறியோம். அவ் வாசகத்திலுள்ள சொற்களெல்லாம் பெரும்பாலும் வேண்டா வழிச்சாரியைகள் என்னலாம் போல் பயனளாவி நிற்கின்றனவே. "ராம, அரசருக்கு ஒருவித கோபமும் இல்லை; துக்கமும் இல்லை" என ஆரம்பித்த இவள், "மன்னர் பரிதபித்துக்கொண்டு துக்கத்தால் முககாந்தி குன்றி......இருக்கின்றார்" என்ன முரண்பட முடிக்குமிது, பொய்யுடையார் வாய்வழூக்கும் தன்மையைத் தழுவியிருக்கின்ற தெனினும், இந்த நாடகநயம் கருதியே இயம்பப் பெற்றிருக்கின்றதென் றெண்ணுவது எளிதன்று. ஏனெனில், அன்னையின் பணியினைக் கேட்டபின்,

> "உலகத்திலுள்ள ஜனங்க ளெல்லாருக்கும் குளிர்ந்தவராயிருக்கும் இராமருக்கு உண்டான இராச்சிய நஷ்டமானது, சந்திரனுடைய ஒளியை இரவு குறைக்காததுபோல், அவர் முகத்தில் விளங்கிய ராஜலக்ஷ்மியின் அழகைக் குறைக்கவில்லை. இராச்சியத்தை விட்டுக் காட்டிற்குப் போய்விடுவதால், அவருடைய மனத்தில் யாதொரு விகாரமும் துறவிக்கு எவ்வாறு தோன்றாதோ அதுபோல் தோன்றவில்லை. தம்மனத்திலிருக்கும் வருத்தத்தை ஒருவாற்றானும் வெளியிற் காட்டாத இராமர்.... போனார்"

என வழங்குமிது கவிக்கூற்று. காட்டிற்குப்போக வேண்டும் என்னும் வருத்தம் ஒன்றும் இராமனது மனத்தில் எழுந்ததில்லை என்னுமவ்வாக்கியம் முடியாமுன்—மனத்திலிருக்கும் வருத்தத்தை வெளியிற் காட்டவில்லை, என மாற்றினால் என் செய்வது. சந்திரனுடைய ஒளியை இரவு குறைக்காதென்னும் உவமையின் அழகில் ஈடுபட்டுத் தன்னை மறந்திருந்தாலன்றி இம்முரண்மொழியைக் குறிக்கொள்ளாதகல்வதருமை. இந்த உவமை இனிதின் அமைந்த தென்று மகிழ்வார் மகிழ்ச்சியைக் கலைக்கத்தான், தயரதன், "பொய்யைச் சொல்லிவிட்டு மனக்கலங்கி நிற்கும் மாமுனிவர்போல்' இராமனுக்குத் தேன்றினன் என்பதுபோன்ற உவமைகள் சில விளைந்து நிற்கின்றனவே. பொய்சொல்லிவிட்டு மனங்கலங்கி நின்ற மாமுனிவர் எத்தனை பேரை இராமன் இதற்குள் பார்த்திருப்பானென்று எண்ணுவது ? மாமுனிவரா யிருப்பவர் பொய்சொல்வர் என்பதனினும் அருமை,தயரதனைக் கண்டவுடன் இராமனுக்கு அன்னார் நினைவு வந்தெழுதல். இராமனுக்குத் தயரதன் அவ்வண்ணந் தோன்றியிருப்பான் என்று வான்மீகிமுனிவர் ஊகிக்க நேர்ந்ததும் ஆச்சரியமே,

மதிப்புரை

ஸ்ரீராமநாத மான்மியம்

ஸ்ரீராமநாத வித்யாலயத் தமிழ்ப் பண்டிதரும், ஸ்ரீராமநாத சமஸ்தான வித்துவானுமாகிய

சாவகச்சேரி

ஸ்ரீமான் ச. பொன்னம்பல பிள்ளை அவர்களால் இயற்றப் பெற்றது.

பயனும் புகழும் முற்றிய ஆயுள் நிறைந்து சிவ பெருமான் திருவடிகளை எய்திய இலங்கைப்பெரு மகன், ஸர். பி. இராமநாதனது வாழ்க்கைச் சரி தத்தை ஆயிரத்திற்கு மதிகமான விருத்தங்களில் பாடியுள இந்நூல் இலங்கைத் தமிழர்களால் மாத்திர மன்றி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் என் பதில் ஐயமில்லை. தொல்குலப் பெருமையாலும், கல் விப் பெருக்கினாலும், செல்வம் செல்வாக்காதிகளா லும், நீதியுடைய நினைப்பினாலும், ஓர் மன்னனே என வாழ்க்கை நடாத்திய அண்ணல் ஸர். பி. இராம நாதன் பெற்றிருந்த பேறுகளில், இந்நூலாசிரியர் பொன்னம்பல பிள்ளை அவர்களைச் சமஸ்தான வித்து வானாக வாய்க்கப்பெற்றிருந்ததும் ஒன்றெனல் வேண் டும். மாபெருங்காவியம் ஒன்று ஆக்கப்புகும் ஆர்வத் தோடு இவர், நாடு நகரச் சிறப்புக்களுடன், மரபினர் மாட்சி கூறி ஸர். பி. இராமநாதனது மான்மியத்தைப் பாடும் இப்பக்தியும் முயற்சியும் மிகவும் வியத்தற் குரியவைகளே. தயரத ராமனையும், நிடதர் வேந் தனையும் இறையாகவைத்துப் பிரபந்தங்கள் பாடுதல் ஒருவாறு எளிதென்று உரைத்தல் வேண்டும்; மற்று ஸர். பி. இராமநாதன் அனைய தற்காலத் தோன்றல் களைப் பாட்டுடைத் தலைவராய் வைத்துச் சுவைவாய்ந்த காவியம் ஒன்று பாடுதல் எத்துணை அருமை என்பது அது பாடிப் பார்த்தவர்க்கே உணரவல்லதாகும். ஆயி னும், "ஊதிசைத் தும்பிக்கென்றும் கள்ளூவந் தூட்டுந் தாராய்" என்று பாட்டுடைத் தலைவரை அழைப்பிக்கும் போதும், அப்பாட்டுடைத் தலை வர் சென்னை மயிலாப்பூரில் அக்கிராசனம் வகித்த திருவள்ளுவ மகாசபையை, "இந்திரன் சபை அழ கென் றிசையாமல் எதை இசைப்போம்" என்று வியக் கும்போதும் இவ்வாசிரியர் பண்டைநூல் மரபுகாத் துக் காவியம் பாடுகின்ற திறமை மிகவுடையவர் என் பது தெளிவாகின்றது.

"மிதிலைமான் பதம் படலால் தவம்பெறீஇ யுயர் ந்த" இலங்கைக்கோர் விளக்கெனத்தோன்றி உலகடங் கலும் நலமுற வழுத்தப்பெற்று வாழ்ந்த பெரியாரது குணச்சிறப்புக்களும் கல்வியினது அகலமும், மனை வாழ்க்கைத் தூய்மையும், அன்னார் ஆற்றிய உத்தியோ கங்களும், இயற்றிய நூல்களும், சென்ற பயணங்க ளும், நிகழ்த்திய சொற்பொழிவுகளும், அவர் குடும் பத்தினர் நலங்களும் யாவும் ஒருங்கே திரட்டித் தந் துள இந்நூலை, ஸர். பி. இராமநாதனை அறிந்திருந் தோர் அனைவரும் ஆதரத்துடன் ஓதி இன்புறுவார் என நினைக்கின்றோம்.

இந்நூலின் ஆசிரியர் தம் குறிப்புரையில்,—"...... எவர்க்கு மெளிதிற் பொருடரு மியற்சொற்களையே பிரயோகித்துஞ் செய்யுள் நடையோ உரைநடையோ வென்று கருதும் வண்ணம் காலவகைக்கேற்ப இந்நூ லியற்றப் பெற்றிருத்தல் கற்றறிந்த அறிஞர்கள் உய்த் துணர்ந்து கொள்ளத் தக்கதேயாம்"—என இயம்பு கின்றார். இந்தக் காலவகையைக் கருத்துட்கொண்டு தான்போலும், அரும்பத அகராதிபோக்கி, எளியபத அகராதி யொன்று நாலணுவிற்குள் அடங்கிப் பிரசுர மாகவேண்டுமெனும் தீர்மானம் தமிழ்த் தொண்டர் மகாநாட்டில் நிறைவேறியதென்று அண்ட புராணத் தின் முன்னுரையென ஸ்ரீமான் T. T. கிருஷ்ண காந்த முதலியார் விளையாட்டாக வரைந்திருக்கின் றார்.

—

நவரஸ கீத மஞ்சரி.

இது சென்னை அடையாற்றுப் புத்தகசாலை ஸ்ரீமான் வ. சு. ராமசுப்பையா இயற்றியது. விலை அணு. 2.

"ஆசிரியன் தன் வாழ்வில் நாடோறும் ஒரு புதுமை எய்த முயன்றதில் மலர்ந்தன இப்பாடற் பூக்கள். ஆசிரிய னுடைய கருத்து, இத்தகைய இடைவிடா முயற்சியாலேயே பாரத தேசம் முன்னேறு மென்பதாம். ஒவ்வொருவரும் நாடோறும் தம் வாழ்வை ஓர் புதிய குதூஹலத்துடனும் ஆனந்தத்துடனும் தொடங்கித் தம் மநமெய் மொழி நடை களைத் தூய்மையுற மாற்றுவாராயின் அதே வாழ்விற் பெறற் குரிய பூரண ஸ்வராஜ்யம். அதையடைந்த ஒவ்வொரு வரும் பாடல்களியற்றலாம். உலகத்தையே யழகுற மாற்ற லாம்"

என்று இவ்வாசிரியர் முன்னுரையில் வரைந்துள்ள ஒவ்வொரு சொல்லும் கலாநிலயத்திற்கு உகந்ததே. இவ்வகை உத்தமநோக்கத்தோடு பாடிய கீதங்கள் மிக வும் பாராட்டற்குரியன வென்பதில் ஐயமில்லை. இவ் வாசிரியருடைய கருத்து, அவரது பாடல்களை ஓது வோர் மனத்தினும் பதியுமாயின் உலகம் எவ்வளவோ உயர்நிலை யடைந்து விடுமே. இதன் ஆசிரியர் போன்ற நோக்கமும் ஊக்கமும் உடையவர்களே இவ்வுலகிற்கு உண்மையான நண்பர்களாவார்.

இவ்வாண்டில் புதிய சந்தாநண்பர்களாய்ச் சேர்ந்திருப்பவர்க்கு 1930-வது ஆண்டு இதழ்கள் வேண்டுமாயின் உடனே வரைதல் நலம். ஆப்லெதர் பைண்ட செய்து தபால் செலவு உள்பட விலை ரூ. 10. வரைந்து பணத்தையும் அனுப்பிவைக்கவும்.

மானேஜர்



அசல் சேப்ரோல் வாடை அசல் பசும்நெய் மணம்
இன்புறும் காரம் இவைகள் ஒருங்கே அமைந்ததும்
90-வருஷகாலமாக உலக முழுவதும் பிரசித்தி
பெற்றதுமான

அசல் ஷண்முகம் பட்டணம் பொடி

இடம்பொருள் ஏவல் எள்ளளவும் குன்றாது சடமெனும் புகையிலை சகல
விதத்திலும் தெரிந்தெடுத்து ஏற்ற முறைப்படி முடித்து
வாங்குவோர் பயனையே மிக நாடுவது எது?
மண்ணில்வாழ் மாந்தர் யாழ்க்கைக் கின்றியமையாததும்
மகிழ்ச்சி யூகம் ஊக்கம் முதலியவை உபயோகிக்கும் போதெல்லாம்
ஊட்டுவதும் அவரவர் தம் மனத்துயரை ஓட்டுவதும் எது?

அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே!!

அ ச ல் ஷ ண் மு க ம் ப ட் ட ண ம் பொ டி

எல்லாரையும் எப்பொழுதும் ஏமாற்ற முடியாதென்ற சொல்லால் முக்காலத்
திலும் முதன்மைபெற்ற மூதுரையின் முறைபற்றி வியாபாரம் நடத்திப்
பரவைசூழ் புவியில், பாவலர், நாவலர் ஆவலோடு பன்முறை
ஷண்முகம் பட்டணம் பொடி! ஷண்முகம் பட்டணம்
பொடி!! எனப் பதம்பாடும் எங்கள்

அசல் ஷண்முகம் பட்டணம் பொடியே!!

ஷண்முகம் பட்டணம் பொடி கம்பெனி, லிமிடெட்.

போஸ்ட் பாக்ஸ் 140, மதராஸ்.

குறிப்பு:—பல போலிப்பொடிகள் தோன்றித் தேகாரோக்கியத்திற்கு இடையூறு யிருப் பதால் 90-வருஷகாலமாகப் பிரசித்தி பெற்று உலகடிரேட் மார்க்குள்ள அசல் ஷண்முகம் பட் டணம் பொடியையே உபயோகித்து ஆனந்தத்தை அடையுங்கள்.

இந்த விளம்பரத்தைத் தங்கள் ஊர்ப்பொடிக் கடைகளில் காட்டி இதில் குறித்திருக்கும் அசல் ஷண்முகம் பட்டணம் பொடி இல்லாத 6-கடைகளின் விலாஸங்களைத் தெரிவித்தால் ஒரு அழகிய காலண்டர் இனுமாகக் கொடுக்கப்படும்.

சென்னை-600 008
188914

நோயற்ற :: :: வாழ்வே | **ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்** | குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளைநீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A., B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

Estd. NATIONAL 1906

INSURANCE COMPANY LIMITED.

Head Office:- NATIONAL INSURANCE BUILDINGS
7, Council House St, Calcutta.

PHENOMENAL PROGRESS

Because it
Offers all that is best in Life Assurance on account of
Lowest Premium Rates
Large Bonuses
Liberal Policy Conditions
Sympathetic treatment of Policyholders.
Prompt Settlement of Claims.

Comparatively Considering

This Company's position has not been equalled by any other Indian Life Office.
Agents wanted in unrepresented areas.
For Particulars apply to :—

113, Armenian St, Madras. } **T. ANANTACHARI**, B.A., *Branch Secretary*.

விஜய ரக்ஷித கவசம்.

இது ஓர் மஹானின் மந்திர உபதேசத்தினாலும், ஓர் அபூர்வ மூலிகையினாலும் தயாரிக்கப் படுகிறது. இதை அணிபவர்கள் கிரகதோஷம் முதலிய பல துன்பங்களிலிருந்து விடுபடுவதும் தவிர, எவ்வித காரியங்களிலும் வெற்றியடைந்து, ஆரோக்யம், சந்தானம், ஐஸ்வர்யம், தெய்வானுக்கிரகம், மனநிம்மதி இவைகளைப் பெறுகிறார்களென்பதை அனுபவத்தாலறியலாம். வெள்ளிக் கவசம் ரூ 5. தங்கம் ரூ. 15.

விலாசம் :—புரபசர். கா. கோவிந்தாச்சார்,
மெஜிஷன் &மெஸ் மெரிஸ்ட், 218, தங்கசாலை, மதராஸ்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. **2 0 0**
வெளி நாடு " ரூ. **2 8 0**

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு மகிழ்ச்சியையும் ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்றாகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷை சாதா ரகம் பொடி வீசை ரூபா 3½. டாக்டர் B. S. மல்லையா M. B., & C.M., & M.L.C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்கு அணா 4. டஜன் ரூபா 2¼ ஷை ஒரு சேர்டின் ரூபா 1¾ வி பி. ரயில் சார்ஜ் வேறு.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

கலா நிலயம்

1930 பைண்ட் வால்யூம் மிகச் சிலவே இருக்கின்றன. 1928-வது ஆண்டு இதழ்களை வாங்குவார்க்கன்றி 1929 ஆண்டு இதழ்கள் மாத்திரம் கொடுப்பதற்கியலாது. அவைகளும், இன்னும் பத்துப் புத்தகங்களே இருக்கின்றன. வேண்டுவோர் விரைவின் வரைக.

விலை:—(தபால் செலவு உள்பட) வால்யூம் ஒன்றிற்கு.

	உள்நாடு	வெளிநாடு
பைண்ட் செய்யாதது	ரூ. 8-0-0	ரூ. 9-8-0
காலிகோ கில்ட்	9-8-0	11-0-0
ஆப்லெதர் கில்ட்	10-0-0	11-8-0

கலாநிலயம் ஆபீஸ்—புரசைபாக்கம், சென்னை.

அமிர்தகுணபோதினி

இது ஒரு நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை

ஒரே ரூபாய் சந்தாவில் 80 பக்கங்கள்.

எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் பத்திராசிரியர்

நீங்கள் "அமிர்தகுணபோதினி"யைப் பார்த்திருக்கிறீர்களா ?

இதுபோன்ற நவீன மாதாந்திர ஸஞ்சிகை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கில மாதஸஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகின்றது. பொதுநலப் பத்திரிகையாயும், பிரசித்த விகடப்பத்திரிகையாகவும் விளங்குகின்றது. எல்லாம் கருத்து எல்லாம் அநுபவம் எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய செவிக்கினிய அலங்கார வசன மழை. 80 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை இது ஒன்றேதான். பார்ப்பதற்கும் அழகு, படிப்பதற்கும் இனிமை, நினைக்க நினைக்க மனோகரமே. இந்த ஸஞ்சிகைக்கு நிகராக வேறெந்த ஸஞ்சிகையும கிடையாது. 31,000 சந்தாதாரர்கள் உள்ளது. வருடசந்தா ரூ 1. வெளி நாடுகளுக்கு ரூ 1-8-0. மாதிரி காபி வெளிநாடுகளுக்கு இனாம்.

புரோப்ரைட்டர்

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்தகுணபோதினி ஆபீஸ்,
நெ. 302, தங்கசாலைத் தெரு, சென்னை.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"
VELLALA STREET,
Purasawalkam, MADRAS.

பிறர் கைப்பட்ட

சமையலென்ற பழியில்லை

ஆர் கைப்பட்டதோ, ஆர் பார்த்ததோ, ஆர் சமைத்ததோ என்று கூசிக்கூசி உண்ணுமல் விடுபவர்கள் மனரம்மியத்துடன் உணவு உண்ணக்கூடிய வழிகாட்டும் துணை

ருக்மணி

குக்கர்

தாங்கள் தாங்களே வேண்டியபடி, வேண்டும்போது தம் கைகளாலே, தொந்தரவு இல்லாமல் சமைத்துக் கொள்ளலாம். 1, 2, 4, 6, 8, 12, 16, பேர்களுக்கு ஏழு அளவுகளில் ரூ. 12, 16, 20, 25, 31, 37,44-ல் உண்டு. விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பனி,
இராயபுரம் (12) சென்னைப்பட்டினம்,

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிறார்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவச மிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 9, பிராட்வே, சென்னை.

வர்த்தமானம்

ஐரோப்பாவில் சென்ற 50 வருடங்களாகச் சூரிய வெளிச்சத்தினின்று மின்சாரசக்தி எடுத்து அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிச் சில இயற்கைச் சாஸ்திர நிபுணர் முயன்றனராம். ஜெர்மனியில் இம் முயற்சியில் ஈடுபட்டிருந்த டாக்டர் வான் வாஞ்சு என்பவர் சூரியசக்தியிலிருந்து மின்சாரசக்தி உண்டாக்கி அதன் உதவியால் சிறு மோட்டார்வண்டியை ஜெர்மனி வீதியில் ஓட்டிக் காட்டினாராம். இதனால் ரயிலை ஓட்ட இயலுமென்றும் இனி மண்ணெண்ணெய் நிலக்கரி பெட்ரோல் ஒன்றும் தேவையில்லையென்றும் அவர் கூறுகின்றாராம்.

***

தென்னாப்பிரிக்காவில் ஏகாதிபத்திய தேகாப்பியாசப் பந்தயம் ஒன்று 1934-வருடம் நடக்கப்போகின்றதென்றும் அதற்கென நியமனமாயிருக்கும் கமிட்டியார், வேலை துவக்கியுள்ளார்கள் என்று தெரிகின்றது. சமீபத்தில் கூடிய அக்கமிட்டியின் கூட்டத்தில் இந்தியர்களும் மற்றக் கறுப்புமனிதர்களும் கலந்துகொள்ளக் கூடாதெனத் தீர்மானம் செய்யப்பட்டுளதாம்.

***

சிலர் இமயமலையின் உச்சியைக் கண்டுவிடுவதென லண்டனிலிருந்து சென்றவார இறுதியில் புறப்பட்டுள்ளனர் என்றும், அக் கூட்டத்தின் தலைவர் ஸ்மித் என்பவர் என்றும் லண்டன் செய்தி ஒன்று கூறுகின்றது. அக்கூட்டத்தில் சேர்ந்தவர் அனைவரும் 38 வயதிற்கு உட்பட்டவர்களாம்.

***

சென்னைக்கும் செங்கற்பட்டிற்கும் இடையிலுள்ள தாம்பரம் என்னும் ஊரின் பெயர் இர்வின்-காந்தி நகர் என்று இடப்படுமென அறிகின்றோம்.

***

இந்தியர்கள் சீமைத்துணிகளைப் பகிஷ்கரிக்கின்ற கோபத்தில் லண்டனில் இருக்கும் இந்திய ஜவுளி வியாபாரிகளிடமிருந்து துணி வாங்கக்கூடாது என்று அங்குப் பிரசாரம்செய்யப்பட்டதாம். பிறகு அவ்வியாபாரிகள் விற்கும் துணிகள் இந்தியாவில் உற்பத்தியானவை அல்லவென்றும் பிரஞ்சு சாமான்கள் என்றும் அறிய, பிரசாரம் நின்றதாம்.

***

லண்டனில் உள்ள பெரிய தேயிலை வியாபாரிகளில் ஒருவரான ஸர் தாமஸ் லிப்டன்ஸ் என்பவர் காலஞ்சென்ற தமது அன்னையின் ஞாபகார்த்தமாகக் கிளாஸ்கோ நகர ஏழைகளுக்கு 10 ஆயிரம் பொன் நன்கொடை அளித்தனராம்.

***

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியாரின் சுற்றுப் பிரயாணத்திட்டம் பின் வருமாறு:—21-ந் தேதிகோயமுத்தூர், 24 கோபிசெட்டிப்பாளையம், பாலக்காடு, 26 மதுரை, 27 உத்தம பாளையம், 28 தூத்துக்குடி, 30 வேதாரண்யம், மே 1-ந் தேதி மன்னார்குடி, 2-ந் தேதியிலிருந்து 5-ந் தேதி வரையில் சென்னையிலிருப்பார். 6 முதல் 10-ந் தேதிவரையில் சேலம் ஜில்லாவில் பிரசாரம் செய்வார். காங்கிரஸ் ஊழியர்களையும், சிறையிலிருந்து வெளி வந்தவர்களையும் அவர் முக்கிய ஸ்தலங்களில் சந்திக்க உத்தேசித்திருக்கிறார். அவர்களுடன் வருங்கால வேலையைப்பற்றிப் பேசுவார். இதைத் தவிர ஸ்ரீமான் கே. சந்தானம், ஸ்ரீமதி ருக்மணிலக்ஷ்மீபதி முதலியவர்களும் ஏப்ரல் 30-ந்தேதி முதல் மே 8-ந்தேதி வரையில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள். ஸ்ரீமான்கள் எ. வைத்தியநாதையர், டாக்டர் சாஸ்திரி, இ. கிருஷ்ணய்யர், மிஸஸ். சங்கரய்யர், முதலியவர்களடங்கிய கோஷ்டி திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம் திருநெல்வேலி ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்யும் என்று ஏ. சுப்பையா அறிவிக்கிறார்.

***

அமெரிக்காவைச் சேர்ந்த நியூயார்க் நகரில் மிஸ் எல்லா வேண்டல் என்று ஒரு மாது இருந்தாள். அவள் தனது எண்பதாவது வயதில் மார்ச் 14-ந் தேதியன்று இறந்துவிட்டாள். அவள் சொத்து மொத்தம் 4 கோடி பவுன். இவ்வளவு பெரிய பணக்காரியாக இருந்தும் அவள் இந்த எண்பது வருஷமும் தனியாகக் காலங் கழித்ததுடன் எளிய வாழ்க்கையையும் மேற்கொண்டிருந்தாள். நியூயார்க் நவீன நாகரிகத்திற் சிறந்ததாயிருந்தும் அவள் தன் வீட்டில் டெலிபோனையோ, மோட்டாரையோ இதர நவீன வசதிகளையோ வைத்துக்கொண்டதில்லை; அவள் படகிலும் ஏறியதில்லை.

***

நேபாளத்தில் காயத்ரி என்னும் பைராகி, அங்குள்ள பசுபதிநாதர் கோயிலில் சென்ற முப்பது ஆண்டுகளாக ஒரு காலில் நின்றுகொண்டு தவம் இயற்றுகின்றனராம்.

***

பரோடா சமஸ்தானத்தில் எதிர்ஜாமீன் என்ற பேரால் பிள்ளைவீட்டுக்காரர் பணம் வாங்கும் வழக்கம் நிற்கவேண்டி ஒரு சட்டம் செய்யப்பட்டுள்ளது. பிள்ளைவீட்டார் வாங்குவதும், பெண்வீட்டுக்காரர் கொடுப்பதும் குற்றமாகும். இதை மீறினால் 6 மாதம் காவல் தண்டனையும் ரூ. 500 அபராதமும் விதிக்கப்படும் என்று தெரிகின்றது.

***

ஜியார்ஜ் சக்கரவர்த்திக்குப் பார்லிமெண்டார் வருடமொன்றிற்கு 470,000 பவுன் உதவுகின்றனர். மன்னர்களுக்குரிய செலவுகள் பல அது தெரியாதவர் இதை ஒரு பெருந்தொகையாகக் கருதுவர். உலகத்திலுள்ள எல்லா அரசர்களிலும் ஜியார்ஜ் சக்கரவர்த்தியே குறைவான பொருள் பெறுகின்றார்.

***

காருடுகொத்தானுக்கும், நேமத்தாம்பட்டிக்கும் இடையிலுள்ள பெரியகோயில் ஒரு பழமையான ஸ்தலம். இங்கு ஸ்ரீ ஒப்பிலாஅம்பிகை ஸமேதராய்ச் சிவலோக நாதர் திருக்கோயில் கொண்டுளார். காருடுகாத்தான் நேமத்தாம்பட்டியிலுள்ள தனவணிகச் செல்வர்களின் பொருள் உதவிகொண்டு, இக்கோயில் புதிப்பக்கப் பெற்றது. க. வெ. ராம வேங்கடாசலம் செட்டியாரவர்கள், இலக்ஷக் கணக்கில் தம் சொந்தப் பொருளை இத் திருப்பணிக்குச் செலவிட்டுள்ளார். சித்தரை 17-ந் தேதியன்று மகாகும்பாபிஷேகம். அக் கும்பாபிஷேக விழாவிற்கு எல்லோரும் வந்து சிவனருள் பெற்றுச் செல்லு படிக்கு, காருடுகொத்தான் ... வாசிகள் வேண்டிக்கொள்கின்றனர்.

188914
ஊ211, M28KN
N31 4.16

KALANILAYAM. REG. No. M. 2324.

: : பிரபல ஜோதிஷர் : :

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

ஆயுர்வேத வித்வான் V. B. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜன்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பேஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

SADVAIDYASALA NANJANGUD
SOLE AGENTS THE UNITED CONCERN, MADRAS

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

மதுரை
காஞ்சீபுரம்.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ.	18—0—0
காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்)	10—0—0
தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான. தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது.	6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

டாக்டர் எம். ஸி. நண்சுண்டராவின்
இணையற்ற மருந்துகள்.

எம். ஸி. என். ஸ்நானத் தைலம்.

இது ஸ்நானத்திற்காகவே தயாரிக்கப்படுவது. இதில் சேர்ந்துள்ள மூலிகைகளும், எண்ணெயும் சாஸ்திரீயமானவை. தலை நோய்கள், கண்களில் ஏற்படும் சில வியாதிகள், உடம்பில் ஏற்படும் வலிகள் இதை உபயோகித்து வர ஒழிந்துபோம். காலஞ்சென்ற டாக்டரின் சிறந்த ஸ்நானத் தைலம் இதுவே. வக்கீல்கள், மாணவர்கள், மூளையைக் கொண்டு பிழைப்பவர்கள் முதலியவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம். மூளையைக் குளிரச் செய்து ஞாபகசக்தியை வளர்ப்பதில் ஒப்புயர்வற்றது. விபரகாட்லாக் இனாம்.

6 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 1-0-0

எம். ஸி. என்ஸ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாய்க்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத் திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)